
# ஜாமக்காரன்

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com.  Fax: 0427- 2386464.  www.jamakaran.com

WATCHMAN



കാവൽക്കാരൻ



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்களுக்கு இயேசுகிறிஸ்துவினால் ஆறுதல், சமாதானம் உண்டாவதாக.**

**இந்த ஜாமக்காரன் உங்கள் கைகளில் கிடைக்கும்போது வெளிநாட்டில் ஊழியம் செய்துகொண்டிருப்பேன். அக்டோபர் மாத ஜாமக்காரனுக்கான செய்திகளை தமிழ் மற்றும் மலையாளம் பாஷைகளில் தயாரித்து முடித்து அச்சகத்துக்கு அனுப்பும் ஏற்பாடுகளை செய்துவிட்டுதான் வெளிநாடு பயணமாகிறேன். மாதம் தவறாமல் ஜாமக்காரன் மூலம் உங்களை சந்திப்பதில் எனக்கும் சந்தோஷமே!.**

**இப்போது ஒவ்வொரு மாதமும் இரண்டு பாஷைகளில் வெளியிடும் ஜாமக்காரனின் புதிய தேவைகளைக்குறித்தறிந்து அதற்க்கேற்ப காணிக்கைகளை அனுப்பிய எல்லா வாசக குடும்பங்களுக்கும் நன்றி கூறுகிறேன்.**

**2015 ஆகஸ்ட் மாத ஜாமக்காரனில் பக்கம் 10ல் அந்நியபாஷை தலைப்பில் எழுதப்பட்ட ஆவியானவரின் நிறைவைப்பற்றி IPC பாஸ்டர் ஒருவர் வெகுவாக பாராட்டி பேசினார். ஆவியானவரைப்பற்றி, ஆவியானவரின் நிறைவைப்பற்றி, இத்தனை தெளிவாக, எல்லாரும் விளங்கிக் கொள்ளும் அளவு கூறியிருப்பது ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார் எனபதற்கு தெளிவான சாட்சியாகும். அந்நியபாஷை பேசாத நீங்கள் இத்தனை தெளிவாக ஆவியானவரைப் புரிந்து வைத்தஅளவு பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள சீனியர் பாஸ்டர்கள் ஒருவரும் இந்த அனுபவத்தில் இருக்கிறார்களா என்பது சந்தேகமே!. எனக்கும் உங்கள் ஜாமக்காரனை வாசித்தபின் அந்த சந்தேகம் வருகிறது. நானே காலையில் எழுந்து ஜெபிக்கும்போது வழமையாக என் ஜெபத்தில் கேட்பதுபோல் ஆவியானவரே அக்கினியாய் என்மேல் இறங்கும். என்னை இன்றைய புதிய ஆவியால் நிரப்பும் என்று ஜெபித்தேன். அதன்பிறகு உங்கள் பத்திரிக்கையை வாசித்த அந்த பகுதி எனக்கு ஞாபகத்தில் வந்தது. உண்மையில் நான் வெட்கப்பட்டுபோனேன். எனக்குள் வந்துவிட்ட ஆவியானவரை நான் ஏன் வாரும் என்று கூப்பிட்டேன்?. பழக்கதோஷம் டாக்டர். உண்மையில் இப்படிப்பட்ட**

# செப்டம்பர் 2015

**தவறான ஜெபத்தில் ஊறிப்போன எங்களுக்கு இதை சரிசெய்ய கொஞ்சம் கடினமாக இருக்கிறது. ஆவியானவர் உங்களை எங்களுக்கு நல்ல ஜாமக்காரனாக, காவல்காரனாக ஈவாக அளித்ததற்கு நாங்கள் கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம் என்று கூறி தொலைப்பேசியில் வாழ்த்தினார். அப்படியே** You Tube**ல் வெளிவந்த கள்ளபோதகர்களைக்குறித்து அப்படியே தோலுரித்து காட்டிய உங்கள் தைரியத்தை பாராட்டுகிறோம்.**

‘ **ஜாமக்காரனை வாசித்துகொண்டிருக்கும்போதே என் மகள்** You Tube**ல் நீங்கள் கூறிய பகுதியை எனக்கு போட்டு காட்டினாள். அதை கண்டு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று கூறினேன். இப்படி பலர் எனக்கு எழுதிய கடிதங்கள், பாராட்டுகள் ஏராளம். மகிமை கர்த்தருக்கே!.**

**அவர்கள் எழுதிய எல்லாவற்றையும் வாசகர் பகுதியில் வெளியிட விரும்பவில்லை.**

‘ **பேங்க் வழியாக ஆன்-லைனில்** மூலமாக (SBI,Canara Bank,IOB)**நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் அப்படியே எங்கள் அக்கவுண்ட்க்கு வந்து சேர்ந்துவிடுகிறது. நீங்கள் அனுப்பும் காணிக்கை ஒன்று தவறாமல் வந்துசேர்ந்துவிடுகிறது. ஆனால் பலருக்கு ரசீதோ, நன்றி சொல்லி கடிதமோ எழுத முடிவதில்லை. ஒரு சிலரின் விலாசம் தனியாக அவர்கள் எழுதி அறிவிப்பதால் அவர்களுக்கு மட்டும் ரசீதும் அனுப்பமுடிகிறது.**

‘ PDF **மூலமாக ஏராளமானவர்கள் ஜாமக்காரனை பெற்று டவுன்லோடு செய்து வீட்டில் உள்ளவர் அனைவரும் படிக்கவும், மற்றவர்களுக்கு அதை அனுப்பி படிக்க செய்யமுடிகிறது.**

‘ **இன்னும் யாருக்காவது**PDF **மூலமாக ஜாமக்காரனை அனுப்பவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அவர்களின் இ-மெயில்** ID **முகவரியை** E-Mail **மூலமாகவே அனுப்புங்கள். அவைகளை நாங்கள் தனியாக குறித்து வைத்து ஜாமக்காரன் அச்சடித்து தபாலில் சேர்க்கைக்கு முன்பே நீங்கள** PDF**மூலம் ஜாமக்காரனை படித்துவிடலாம்.**

‘ **ஆன்-லைனில் காணிக்கை அனுப்புகிறவர்கள் தயவுசெய்து உங்கள் விலாசம், தொலைபேசி எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள்.**

‘ **மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன். தொடர்ந்து ஜெபியுங்கள்.**

‘ **ஊழியர்களிடம் விழிப்பாக ஜாக்கிறதையாக இருங்கள்.**

‘ **தொடர்ந்து உங்களுக்காக எங்கிருந்தாலும் ஜெபிப்பேன். வெளிநாட்டில் என் ஜெபநேரம் இரவு 1 மணிக்குமேல் ஆகும்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

www.jamakaran.com

# திருமணமாகியும் - பிள்ளைபேரு இல்லாதவர்களுக்கான செய்தி

(Rev.**Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய **"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"** என்ற நூலிருந்து எடுத்தாளப்பட்ட செய்தியாகும்).

தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய ஊழியங்களை நிறைவேற்றும் ஒரு தம்பதி தங்கள் உள்ளத்தில் ஒரு பெரிய ஏக்கத்தோடும், பாரத்தோடும் காணப்பட்டார்கள். அவர்களுக்கு திருமணமாகி அநேக ஆண்டுகளாகி யிருந்தாலும் அவர்களுக்கு பிள்ளைகள் பிறக்கவில்லை. பிள்ளைகள் இல்லை என்கிற ஏக்கம் அவர்களை ஆட்க்கொண்டிருந்தது. அவர்கள் துக்கப்படுவதற்கு ஒரு காரணம் மற்றவர்களுடைய வசையான பேச்சு,அது என்னவென்றால் அவர்களுடைய பாவத்தினாலோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் பாவத்தினாலோ அவர்கள்மேல் **சாபம்** இருக்கிறது. ஆகையினால் அவர்களுக்குப் பிள்ளைகளில்லை என்று சிலர் கூறினார்கள். பிள்ளையில்லாமைக்குக் காரணம் கணவன்தானென்றும் சிலர் மனைவிதானென்று கூறுகிறவர்களும் உண்டு. நம்முடைய சமுதாயத்தில் நாம் காணும் குறை இது.

பிள்ளையில்லாத நிலையைப்பற்றி திருமறை என்ன கூறுகிறதென்று நாம் அறிந்துக் கொள்ளவேண்டும். நம் சமுதாயத்தில் சொல்லப்படும் காரியங்களையும்,பண்பாடு சொல்லும் காரியங்களையும் பற்றிக்கொண்டு, அவைகளை நம்புவதால் அது நம்முடைய குடும்ப வாழ்வைப் பாதிப்பதற்கு நாம் இடங்கொடுத்துவிடுகிறோம். இப்படித் தங்கள் சொந்த பிள்ளைகளைத் துக்கத்துள்ளாக்கும் பெற்றோர் அநேகர் உண்டு. அப்படியே தங்கள் மனைவிகளைத் குறை அவளிடத்தில்தான் என்று கூறி துக்கத்துள்ளாக்கும் கணவன்மார்கள் உண்டு. கணவன்மாரைத் துக்கத்துள்ளாக்கும் மனைவிகளுமுண்டு. பிள்ளையில்லாமைக்கு தாங்கள்தான் காரணமென்று கணவனும்-மனைவியும் ஒருவரையொருவர் குறை சொல்லிப்பயனில்லை.

குழந்தைகள் தேவனால் வரும் ஆசீர்வாதம் என்று திருமறை போதிக்கிறது.உபா 28:11ல் **"உனக்கு கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாகளுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும்,உனக்கு பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்** என்று பார்க்கிறோம். **பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்,கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்** என்று சங்கீதம் 127:4ல் கூறுகிறது. தேவன் தம் சித்தப்படி தம்முடைய ஈவாகப் பிள்ளைகளைத் தருகிறார் என்று இந்த வசனங்களிலிருந்து தெளிவாகிறது. ஆனால் பிள்ளையில்லாத நிலை எல்லா சூழ்நிலைகளிலும் **சாபமென்று** வேதம் போதிக்கவில்லை. **தேவனுக்குப் பிரியமாய் நடக்கிறவர்களுக்கும் கூட பிள்ளைகள் இல்லாமல் இருப்பதை** நாம் வேதத்தில் பார்க்கிறோம்.

உபா 28:18ல் **"உன் கர்ப்பத்தின் கனியும்,உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்"** என்று கடவுள் கூறுகிறார். இந்த அதிகாரத்தில் ஆசீர்வாதத்தின் வழியைப்பற்றியும், சாபத்தின் வழியைப்பற்றியும் தேவன்

தம் மக்களுக்குப் போதிக்கிறார். இந்த வசனத்தில் சாபத்தின் வழியில் **கர்ப்பத்தின் வழி** சபிக்கப்பட்டிருக்கும் என்று கூறுகிறார். **கனியில்லாமல் இருக்கும்** என்று கூறவில்லை. ஆகையால் பாவம் செய்கிறவர்களுக்கும் பிள்ளைகள் பிறக்கலாம். பிள்ளைகள் பிறப்பதினால் அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தி, அவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்களென்று சொல்லமுடியாது. உப 28:32ல் "உன் குமாரரும்,உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்: அவர்களைக்காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போம்: உன் கையில் பெலனில்லாதிருக்கும்" என்று கூறுகிறார். பிள்ளைகள் பிறந்தாலும் அவர்கள் சபிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் அந்நிய ஜனங்களிடம் ஒப்புக்கொடுக்கப் படுவார்கள் என்று இதிலிருந்து அறிந்துக்கொள்ளுகிறோம். இது சாபத்தின் வழி. இன்னும் உபா 28:41ல் **"நீ குமாரரனையும்,குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடகூட இரார்கள்: அவர்கள் சிறைப்பட்டுப் போவார்கள்"** என்று கூறியிருக்கிறது. சாபத்தின் பாதையில் கணவனும்-மனைவியும் பிள்ளைகள் இல்லாமலிருப்பார்களென்று தேவன் கூறவில்லை. பிள்ளைகள் பிறந்தாலும் அந்த பிள்ளைகள் பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தரமாட்டார்கள். அவர்களோடு வாழமாட்டார்கள்,சாபத்துக்குள்ளாகிவிடுவார்கள் என்றுதான் தம் வசனத்தில் கூறுகிறார்.

நம் சொந்தப் பிள்ளைகள் திருமணமாகி, குழந்தை இல்லாமல் இருப்பார்களானால் அவர்களிடத்தில் அன்போடும்,கரிசனையோடும் நடந்துக்கொள்ளவேண்டும். வசைச்சொல் எதுவும் சொல்லக்கூடாது. பிள்ளைகள் இல்லாத தம்பதிகளைக் காணும்போது அவர்களிடத்தில் கரிசனையோடு பழகவேண்டும். பிள்ளையில்லையே என்கிற ஏக்கத்தோடு உள்ளத்தில் புண்பட்டிருக்கிறவர்களை ஆறுதல் படுத்த வேண்டுமேஒழிய அவர்கள் புண்படும்படி பேசக்கூடாது. அவர்களை நியாந்தீர்த்து அவர்களுடைய சாபத்தினால் தான் பிள்ளையில்லை என்று கூறிவிடக்கூடாது. ஓசி 9:12ல் "அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்தாலும், அவர்களுக்கு மனுஷர் இராதபடிக்கு அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்குவேன்" நான் அவர்களை விட்டுபோகையில் அவர்களுக்கு ஐயோ? என்று கடவுள் கூறுகிறார். தேவனுக்குத் துரோகம் பண்ணி, அவரை விட்டுப் பின்வாங்கிப்போன, தம்முடைய மக்களுக்கு அவர் கூறும் சொற்கள் இவை. அவர்களுடைய பிள்ளைகள் சபிக்கப்பட்டிருப்பார்கள் அல்லது அவர்கள் பிள்ளைகளற்றவர்களைப்போலிருப்பார்கள். இந்த வசனங்களிலிருந்து பிள்ளையில்லாத நிலை **சாபத்தின் விளைவு** என்று நாம் முடிவு கட்டவிட முடியாது. தீமை செய்கிறவர்களுக்கும், தெய்வ பயமற்றவர்களாய் வாழுகிறவர்களுக்கும் குழந்தை இருப்பார்கள். ஆனால், அந்த குழந்தைகள் ஆசீர்வாதமாய் இருக்கமாட்டார்கள். அப்படி அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தாலும் அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கமாட்டார்கள்.

' **சில வேளைகளில்** கடவுளுடைய நியாயத்தீர்ப்பினால் கர்ப்பங்கள் அடைக்கப்படலாம். ஆதி 20:17,18ல் **"ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலெக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தபடியால், ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்".** அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும் அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, **பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்** என்று வாசிக்கிறோம். அபிமெலேலுக்கு செய்த தவறான செயலுக்காகக் கர்த்தர் அவனுடைய குடும்ப மக்களின் கர்ப்பங்களை அடைத்தார். ஆனால் பிள்ளையில்லாத நிலையிலுள்ள எல்லாத் தம்பதிகளுடைய வாழ்க்கையிலும் இப்படித்தான் என்று நாம் ஒரு முடிவு கட்டிவிடமுடியாது.

சாராளுக்கு ஈசாக்கு பிறந்தது ஒரு அற்புதம்.ஆதி 18:11,12ல் "ஆபிரகாமும்-சாராளும் வயது சென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று. ஆகையால்,சாராள் தன் உள்ளத்திலே நகைத்து நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள்" என்று எழுதியிருக்கிறது. பிறகு 14வது வசனத்தில் **"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்: அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்"** என்று கர்த்தர் கூறினார். இவ்விதமாய் மலடியாயிருந்த சாராளுக்கு அவருடைய அற்புதத்தினால் குழந்தை கிடைத்தது. ஆனால் சாராளுக்கு வயதுமுதிர்ந்த பிறகுதான் ஈசாக்கு பிறந்தான். அதுவரைக்கும் சாராள் மலடியாயிருந்ததற்கு அவளுடைய பாவம் அல்லது ஆபிரகாமின் பாவம் காரணம் என்று நாம் கூறிவிடமுடியாது. கர்த்தரின் திட்டப்படி எல்லாம் நடைபெற்றது. பிள்ளையில்லாத நிலையும் அவர் கரத்தில்தான் இருக்கிறது.

1 சாமுவேல் 1:2ல் (எல்க்கானாவுக்கு) இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்தி பெயர் **அன்னாள்,** மற்றவள் பெயர் **பெனின்னாள்.** பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளைகள் இல்லை என்று வாசிக்கிறோம். ஆனால் பெனின்னாள் கர்த்தருக்குப் பிரியமானவள் என்றோ,அன்னாள் கர்த்தருக்குப் பிரியமில்லாதவள் என்றோ நாம் வாசிக்கவில்லை. 5வது வசனத்தில் புருஷன் "அன்னாளைச் சிநேகித்தபடியினால், அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான். கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார். கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும் படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்" என்று பார்க்கிறோம். கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்தார் என்று மட்டும் கூறியிருக்கிறது. அவள்மேல் அவர் கோபங்கொண்டு அவளுடைய கர்ப்பத்தை அடைத்திருந்தார் என்று கூறவில்லை. கர்ப்பத்திற்கு அதிகாரியாக கடவுள் இருக்கிறார் என்பது திருமறை கற்றுத்தரும் உண்மை. ஆனால், எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர் கர்ப்பத்தை அடைக்கும்பொது நியாயத்தீர்ப்பாக அதைச் செய்கிறார் என்று திருமறை போதிக்கவில்லை. அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்த தேவன், அவளுடைய விண்ணப்பத்திற்கு இணங்கி, அவளுடைய கர்ப்பத்தை திறந்தார் என்று திருமறை கூறுகிறது.

லூக் 1:36ல் "இதோ, உன் இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பம் தரித்திருக்கிறாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்" என்று கூறியிருக்கிறது. அவளை **மலடி** என்று மற்றவர்கள் அழைத்தார்கள். அவளும் தன்னுடைய நிந்தையைப்பற்றிக் கூறுகிறாள். லூக் 1:24ல் "அந்நாட்களுக்குப்பின்பு அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாக கர்த்தர் இந்நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்து, எனக்கு இப்படி செய்தருளினார் என்று சொல்லி ஐந்துமாதம் வெளிப்படாதிருந்தாள்" என்று வாசிக்கிறோம். அவளுடைய பாவம் அல்லது அவளுடைய கணவரின் பாவம் என்று இங்கு சொல்லப்படவில்லை. லூக் 1:6ல் "அவர்கள் இருவரும் (சகரியாவும்,எலிசபெத்தும்) கர்த்தரின் சகல கற்பனையின்படியேயும், நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாக நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்" என்று எழுதியிருக்கிறது. எலிசபெத் மலடியாய் இருந்ததால் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது, இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்.

லூக் 2:36ல் அன்னாளைப்பற்றி பார்க்கிறோம். "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். அவள் கன்னிப்

பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும் அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்" கன்னிப்பிராயத்தில் விவாகமாகி ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவள், ஆனால் அவளுக்குப் பிள்ளைகள் இருந்ததாக நாம் வாசிக்கவில்லை. அவளைக் கர்த்தர் நியாந்தீர்ததால் அவ்விதமாய் இருந்தாள் என்று இங்கு கூறவில்லை. இரவும்,பகலும் தேவலாயத்தைவிட்டு நீங்காமல் உபவாசித்து, ஜெபம்பண்ணி தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தாள். **ஆக்கில்லா,பிரிஸ்கில்லாள்** தம்பதியருக்கும் குழந்தைகளில்லை என்று திருமறையிலிருந்து நாம் அறிந்துக்கொள்ளலாம். அவர்களுடைய பிள்ளைகளைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆனாலும் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒற்றுமையாக சந்தோஷமாக ஊழியம் செய்தார்கள் என்று பார்க்கிறோம்.

பெற்றோர் அருமையாகப் பேணி வளர்த்த மகளுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகளாகியும் குழந்தை பிறக்கவில்லை. இது பெற்றோருக்கு மிகுந்த மனக்கலகக்கத்தை உண்டாக்கிற்று. மற்றவர்கள் என்ன சொல்லுவார்களென்று பயம் அவர்களைப்பற்றி பிடித்தது. நம்முடைய சமுதாயத்தில் திருமணமானவுடன் குழந்தை பிறக்கவில்லையானால் ஏதோ குறை ஏற்பட்டுவிட்டது என்று கணவனும்,மனைவியும் அவர்களுடைய பெற்றோரும் எண்ணுவது இயல்பு. அதைப்பற்றி குடும்பத்தினரும் உறவினரும் நிந்திப்பதும் இகழ்ச்சியாய் பேசுவதும் சாதாரணமாய் நாம் பார்க்கிற சம்பவங்கள். திருமறை இதைக்குறித்து என்ன சொல்லுகிறதென்றறிந்து கடவுளின் சித்தத்தின் வெளிச்சத்தில் இதைப்பார்க்கவேண்டும்.

தன் மக்களுக்கு பிள்ளையில்லையே என்று பெற்றோர் அங்கலாய்த்து தங்களை புண்படுத்தி கொள்ளக்கூடாது. அப்படியே கணவனும்-மனைவியும் தங்கள் வாழ்க்கையையும், அன்பையும் சந்தோஷத்தையும் கெடுத்துவிடக்கூடாது. பிள்ளையில்லாத நிலை ஏற்படும் பொழுது, பெற்றோர் தங்கள் மருமகளையோ,மருமகனையோ நிந்திக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். கணவனும்,மனைவியும் ஒருவரையொருவர் குறை சொல்லிக் கொள்ளுகிறார்கள். இதனால் எவ்வளவோ துக்கமும், பிரிவினைகளும் குடும்ப சண்டைகளும் ஏற்படுகின்றன. பிள்ளையில்லாத நிலை ஒரு பெருங்களங்கம் அல்லது சாபமென்று எண்ணக்கூடாது. திருமணமான பிறகு, குழந்தை பிறக்காததால் திருமண வாழ்வில் ஏதோ குறை ஏற்பட்டதென்று எண்ணக்கூடாது.

**திருமணத்தின் நோக்கம் குழந்தை பெறுவதுதான்** என்று வேதம் போதிக்க வில்லை.ஆதி 2:18ல் **தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்** என்று கூறினார். திருமணம் என்பது வாழ்க்கையில் தனிமையைப் போக்கி, துணைவரைக் கொடுப்பதற்கு கொடுக்கப்பட்டதென்று வேதம் போதிக்கிறது. பிள்ளைப்பேறு ஒரு பாக்கியமாக கொடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் பிள்ளைபேறு தான் திருமணத்தின் முக்கியமான நோக்கம், பிள்ளைகள் பிறக்காவிட்டால் திருமண வாழ்வே குறைப்பட்டுவிட்டதென்று நாம் எண்ணக்கூடாது. தாம் ஏதோ,குறைவுபட்டவர், வாழ்க்கையில் தம்மேல் களங்கம் ஏற்பட்டுவிட்டது என்று கணவர் எண்ணக்கூடாது. மனைவியும் அவ்விதமாய் எண்ணக்கூடாது. இருவரும் ஒருவரையொருவர் இவ்விஷயத்தில் குறை சொல்லக்கூடாது. தங்களுடைய அன்பும் ஒருமைப்பாடும் சரீர சந்தோஷமும் கெட்டுவிடுவதற்கு இடங்கொடுத்து விடக்கூடாது. மனைவியை வெறும் பிள்ளைபெறும் இயந்திரமாகக் கணவரும், கணவரின் குடும்பத்தாரும் கருதுவார்களானால் அது தவறு.

நம்முடைய பெயரும் குடும்பத்தின் புகழும் தொடர்ந்து காக்கப்படவேண்டும். நம்முடைய சொத்துகளுக்கு வாரிசு இருக்கவேண்டும். அதற்காக பிள்ளை அவசியம். அதற்காகத்தான் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற கருத்து நம்முடைய சமுதாயத்தில் நிலவுகிறது.

ஆனால் திருமறை அவ்விதமாய் போதிக்கவில்லை. நமக்கு வாழ்க்கைத் துணைவராக மனைவியையோ,கணவரையோ தேவன் தருகிறார். அந்த உறவில் பிள்ளைகளை அவருடைய ஈவாகவும், ஆசீர்வாதமாகவும் தருகிறார். ஆனால் பிள்ளைகள் பெறவில்லையானால் திருமணம் களங்கம் அடைந்துவிட்டது என்று அவர் கூறவில்லை. சில கலாச்சாரங்களில் பிள்ளை பிறக்கவில்லையானால் கணவர் மனைவியை துன்புறுத்துவது, மாமியாரும்,மாமானரும் சேர்ந்துக் கொண்டு மருமகளைத் துன்புறுத்துவது இன்னும் மிதமிஞ்சிபோனால் அந்த மருமகளை எப்படியாவது ஒழித்துகட்டிவிட்டு, தங்கள் மகனுக்கு வேறு ஒரு மனைவியைத் தேடிக் கொள்ளலாம் என்று எண்ணுவது கடவுளுக்கு விரோதமான பாவம்.

குழந்தையில்லாத கணவனும்,மனைவியும் மருத்துவரிடத்தில் சென்று பரிசோதித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு குழந்தை உருவாகாததற்கு மனைவி, அல்லது கணவர் காரணம் என்று கூறலாம். **அதற்கான சிகிச்சையும்** செய்யலாம். அம்முயற்சி தவறில்லை. அப்படியெல்லாம் செய்து பார்த்தும் குழந்தை பிறக்கவில்லையானால் கணவனிடத்தில் அல்லது மனைவியிடத்தில் **பாவம்** அல்லது **சாபமிருக்கிறதென்று** எண்ணக் கூடாது. **சாராள்** வயது முதிர்ந்தவாளாயிருந்தும் அவளுக்கு குழந்தை பிறக்கவில்லை. ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை. **ஏன் என்கிற கேள்விக்கு** வேதத்தில் பதில் கிடையாது. ஆனால் தமக்கேற்றவேளையில் ஆபிரகாமுக்கும்,சாராளுக்கும் அவர் **ஈசாக்கை** கொடுத்தார். சகரியாவும்,எலிசபெத்தும் தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தவர்கள். ஆனால் முதிர்வயதுள்ள நிலையிலும் எலிசபெத்துக்கு பிள்ளை இல்லை. இங்கேயும் **அது ஏன்** என்கிற **கேள்விக்கு** வேதத்தில் **பதில் இல்லை.**

சிலவேளைகளில் அது ஏன் என்று நாம் அறிந்துக்கொள்ளலாம். கணவனும்,மனைவியும் காலம் கடந்து பிந்தித் **குழந்தை உருவாகும் வயது கடந்த திருமணம்** செய்துகொண்டபடியால் அவர்களுக்கு குழந்தைகள் இல்லாமல் இருக்கக்கூடும். பிந்தித் திருமணம் செய்கிறவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒத்துக்கொள்ளவும் வேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கையிலும்கூட அற்புதங்களை செய்யும் தேவன் குழந்தைகளைக் கொடுத்திருக்கிறார். வயதான சாராளுக்கு திருமணமாகி அநேக ஆண்டுகளான பிறகுதானே ஈசாக்கைத் தேவன் கொடுத்தார். சிலருக்கு அவர்களுடைய உடலில் உள்ள குறையினால் குழந்தைகள் இல்லாமல் இருக்கக்கூடும். இது ஒருவேளை கணவனின் உடலில் காணப்படலாம், அல்லது மனைவியின் உடலில் காணப்படலாம். குழந்தை இல்லாத நிலைக்கு மனைவி மட்டும் காரணம் என்று கருதி மனைவியை கணவர் துன்புறுத்தக்கூடாது. கணவரின் பெற்றோரும் குழந்தை உண்டாகவில்லை என்பதால் தங்கள் மருமகளைத் துன்புறுத்தக்கூடாது. குழந்தை இல்லாத நிலைக்கு கணவரும் காரணமாய் இருக்கக்கூடும். லூக் 1:7ல் **எலிசபெத்** மலடியாயிருந்தபடியினால் அவர்களுக்கு பிள்ளையில்லாதிருந்தது. இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது. எலிசபெத் மலடியாய் அல்லது பிள்ளை பெறுவதற்குரிய சரீர பக்குவமில்லாத நிலையில் இருந்தபடியால் அவர்களுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை என்று இதிலிருந்து அறிந்துக்கொள்கிறோம்.

சில வேளைகளில் **தேவன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறபடியால்** குழந்தைகள் இல்லாமல் இருக்கக்கூடும். தேவன் கர்ப்பத்தை அடைத்தார் என்று கூறும்பொழுது அவர் தண்டனையாக அதை செய்தார் என்று நாம் கூறமுடியாது. கர்ப்பம் அவருடைய அதிகாரத்தின்கீழ் இருக்கிறது என்ற சத்தியத்தைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. இதை அன்னாளின் அனுபவத்தில் பார்க்கிறோம். சாமு 1:5ல் "**(எல்க்கானா) அன்னாளை சிநேகித்தபடியால்**

அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான் கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்" இந்த இருவரும் பாவம் செய்தவர்கள் என்று வேதம் கூறவில்லை என்று பார்க்கிறோம். பிள்ளையில்லாத நிலையைக் கர்த்தர் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கிறார் என்று இதிலிருந்து அறிந்துக்கொள்ளுகிறோம். ஆகையால் பிள்ளையில்லாத நிலைக்குக் காரணம் என்னவென்று நம்மைநாமே அலட்டிக்கொள்ளக்கூடாது. பிள்ளையில்லாத நிலை நிந்தைக்குள்ளானநிலைதான்!. இதை அன்றைய சமுதாயத்திலும் பார்க்கிறோம். பிள்ளையில்லையானால் குடும்பத்தினர், உறவினர் நிந்திக்கிறார்கள். சமுதாயத்திலும் மலடியான பெண்ணுக்கு அதிக நிந்தனை உண்டு. "கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்"(சாமு 1:6). ஒரு பெண்ணுக்கு பிள்ளையில்லாததால் அவளுடைய கணவரின் சகோதரிகள், கணவரின் பெற்றோர் அல்லது அவளுடைய சொந்த சகோதரிகள் அவளைப்பற்றி இகழ்ச்சியாக பேசுவதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் நீ இருப்பாயானால் ஆண்டவருக்குள் உன்னைத் தேற்றிக்கொள்ள வேண்டும். அது உன்னை பாதிக்கும்படி இடங்கொடுத்துவிடக்கூடாது. கடவுளுக்கு பிரியமில்லாத காரியங்களில் ஈடுபடக்கூடாது. "அவள் புருஷனாகிய எல்க்கானா அவளைப் பார்த்து அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்து குமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்றான்(சாமு 1:8). கணவனாகிய எல்க்கானா தம் மனைவி,தன்னுடைய பிள்ளையில்லாத நிலையை ஏற்றுக்கொள்ளும்படி அவளை ஊக்குவிக்கிறார். இப்படித்தான் கணவன்மார்கள் நடந்துக்கொள்ளவேண்டும். பிள்ளையில்லாததால் மனைவியை துன்புறுத்தக்கூடாது. அவளைத் தள்ளிவிடவேண்டுமென்று எண்ணக்கூடாது. அது ஆண்டவருக்கு விரோதமான துரோகம், திருமண உடன்படிக்கைக்கு விரோதமான துரோகம், மனைவியை ஆதரிக்கவேண்டும் அவளை உற்சாகப்படுத்த வேண்டும். அன்னாள் என்ன செய்தாளென்று சாமு 1:7ல் பார்க்கிறோம். "அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு போகும் சமயத்தில் அவன் வருஷந்தோறும் அந்த பிரகாரமாய் செய்வான், இவன் அவளை மனமடிவாக்குவாள் அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள்". அன்னாள் சாப்பிடாமல் துக்கத்தோடு அழுதுகொண்டிருந்தாள். ஆலயத்துக்குப்போனபொழுது, அவள் போய் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, சேனைகளின் கர்த்தாவே தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப்பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக்கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்" என்று கூறி பிராத்தனை செய்தாள்.சாமு 1:10,11). **"அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள்"** அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. சாமு 1:13. மனதுக்கத்தோடும்,பாரத்தோடும் தன் உள்ளத்தை ஆண்டவருடைய சந்நிதியில் ஊற்றிவிட்டாள். ஆகவே இப்படிப்பட்டவர்கள் பிள்ளையில்லை யென்று மனதை அலட்டிக்கொள்ளாதபடி கர்த்தரிடத்தில் அதை சொல்ல வேண்டும், மற்ற விசுவாசிகளையும் ஜெபிக்கும்படி கேட்கலாம். அப்படி ஜெபித்தும் குழந்தை பிறக்கவில்லை யானால் முழுவதுமாய் அவர் கரத்தில் நம்மை ஒப்புக்கொடுத்துவிட்டு, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். குழந்தையில்லாத தம்பதியர் மருவத்துவரிடம் சென்று தங்களை பரிசோதித்துக் கொள்ளலாம். கணவரின் உடலிலுள்ள குறையினாலோ குழந்தை பிறக்காமலிருந்தால் அதை மருத்துவச் சிகிச்சையின்மூலம் சரி பண்ணிக்கொள்ளலாம். அது தவறு அல்ல. அப்படி இருவரின் உடலிலும் எந்த குறையும் இல்லை என்று கண்டுகொண்டால் ஏன் என்று கேட்டு நம்மை அலட்டிக்கொள்ளக்கூடாது.

உன் வாழ்க்கையில் குழந்தையில்லாததால் நிந்தைக்கும் இகழ்ச்சியான பேச்சுக்கும் உள்ளாகிஇருப்பாயானால், அதை ஆண்டவரிடத்தில் எடுத்து சொல். அவர் முன்பாக உன் இருதயத்தை ஊற்றிவிடு. அவர் உன் ஜெபத்துக்குப் பதிலாக குழந்தையைக் கொடுக்கக்கூடும். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. விசுவாசத்தோடு அவர்மேல் முழுவதும் சார்ந்து அவருடைய நாமத்தின் மகிமைக்காக குழந்தை வேண்டுமென்று கேள். அற்புதம் செய்யும் தேவன் குழந்தையைத் தருவாரானால் அந்த குழந்தையை **அவருக்கே அர்ப்பணம்** செய்து, அவருடைய மகிமைக்காக வளர்ப்போம் என்று அவரிடத்தில் ஜெபியுங்கள். அப்படி ஜெபித்தும் குழந்தை பிறக்கவில்லையானால் விசுவாசத்தில் கோளாறு அல்லது நம் வாழ்க்கையில் ஏதோ குறை என்று எண்ணிக்கொள்ளக்கூடாது. நம் எதிர்காலத்தை அவர் அறிவார். ஆகையால் அவருடைய திட்டம் நமக்கு நன்மையாகத்தான் இருக்குமென்று விசுவாசித்து, நம்மை முழுவதும் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு அவருக்கு ஊழியம் செய்வதிலும் அவருடைய நாமத்தில் மற்றவர்களின் கண்ணீரைத் துடைப்பதிலும் நம் கவனத்தை செலுத்தவேண்டும். நமக்கு எது நல்லது நம்முடைய வாழ்க்கைக்கு ஏற்ற வழி எது என்று அறிந்திருக்கும் தேவன் நமக்கு நன்மையானதைக் கொடுக்காமல் இருப்பாரா? சங் 84:11ல் "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்: கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்"என்ற அருமையான வாக்குத்தத்தத்தைப் பார்க்கிறோம். நீ அவருடைய வழிகளில் நடந்து, அவரைக் கனம்பண்ணும்பொழுது, தேவன் உன்னுடைய பிள்ளையில்லாக் குறையைக் கண்டு, அதைத் தீர்க்காமல் இருப்பாரா? அப்படி அவர் தீர்க்காமல் இருப்பாரானால் ஏதே ஒரு நோக்கத்திற்காக அவ்விதம் செய்திருக்கிறார். அதை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். "கர்த்தர் நன்மையானதைத் தருவார். நம்முடை தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.சங் 85:12. நமக்கு நன்மையானதை அவர் நிச்சயமாகத் தருவார். அவர் தரவில்லையானால், ஏதோ ஒரு நோக்கத்திற்காக தராமல் இருக்கிறாரென்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## குழந்தையில்லாதவர்களுக்கு ஒரு சிறந்த ஆலோசைன:

அநாதைகளாய் வறுமையிலும்,துன்பத்திலும் பிறந்த குழந்தைகளைத் தத்து எடுத்து சொந்த மக்களாய் ஏற்றுக்கொள்வதற்கு தேவன் வழி நடத்தலாம். கணவனும்-மனைவியும் கிறிஸ்துவின் நாமத்தில் மற்ற மனிதர்களின் தேவைகளைத் தீர்ப்பதில் நிறைவு காணலாம். கடவுள் ஊழியத்துக்காக தங்களை ஒப்புக்கொடுத்து தங்கள் குழந்தையில்லாத நிலையிலும் முழுவதுமாய் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய மக்கள் உண்டு.லூக் 2:36ல் **விதவையான அன்னாள்** கன்னிப்பிராயத்தில் விவாகமான முதல் ஏழு வருஷம் மட்டுமே புருஷனுடனே வாழ்ந்திருந்தாள் என்று பார்க்கிறோம். பிள்ளைகள் இருந்ததாக நாம் வாசிக்கவில்லை. ஆனால் இரவும்,பகலும் தேவலாயத்தைவிட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளுடைய வாழ்க்கை இவ்விதமாக நிறைவுள்ள வாழ்க்கையாயிருந்தது. ஆக்கில்லா,பிரிஸ்கில்லாள் என்கிற தம்பதியரை எடுத்துக்கொள்வோம். அப் 18:1-3, 24:26லும், ரோம 16:3-5லும்,கொரி 16:4-6லும், தீமோ 4:19லும் அவர்களைப்பற்றி நாம் வாசிக்கிறோம். அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்ததாக நாம் வாசிக்கவில்லை. ஆனால் இருவரும் தங்கள் வீட்டை தேவனுக்கு திறந்துகொடுத்திருந்தார்கள். பவுலைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் உற்சாகப்படுத்தினார்கள். அப்பொல்லோவை அழைத்துக்கொண்டு போய் அவருக்கு திருமறையின் சத்தியங்களை போதித்தார்கள். அவர்களுடைய வீட்டில் சபைகூடி வந்தது. இவ்விதமாய் கர்த்தரின் ஊழியத்திற்கென்று தங்களை முழுவதும் ஒப்புக்கொடுத்திருந்தார்கள்.

பிள்ளையில்லாத தம்பதியர் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும்,துணையாகவும் இருக்கவேண்டும். அப்படி இல்லையானால் பிள்ளையில்லாத குறையை அவர்கள் அதிகமாக உணரக்கூடும். கணவர் மனைவியைவிட்டுப் பிரிந்து வாழ்ந்து, தனிப்பட்டு செயல்படுவாரானால் மனைவிக்கு அது பெரிய ஏக்கத்தையும், வெறுமையையும் உண்டாக்கிவிடும். மனைவி அப்படிச் செயல்படுவாளானால் அது கணவருக்கும் பெரிய வெறுமையை உண்டாக்கிவிடும். ஆகையால் குழந்தையில்லாத தம்பதியர் ஒருவருக்கொருவர் ஆதராவாக இருக்கவேண்டும். தங்கள் வாழ்க்கைத்துணைக்கு உண்மையானதுணையாகஇருக்கவேண்டும்,சேர்ந்துசெயல்பட வேண்டும்.

## ஜாமக்காரனின் ஆலோசனை:

ஜாமக்காரன் வாசகர்களில் பலர் தனக்கு குழந்தை பிறக்கவில்லை என்றும், இனி பிறக்காது என்று மருத்துவர் பரிசோதித்து கூறிவிட்டார்கள் என்றும் கூறி என்னிடத்தில் ஜெபிக்கவும்,ஆலோசனை பெறவும் அநேகர் எனக்கு கடிதம் எழுதினார்கள். அவர்களுக்காகவே மேலே வாசித்த செய்தியை வேறு ஒரு புத்தகத்திலிருந்து தொகுத்து அளித்துள்ளேன். இச்செய்தி அவர்களுக்கு நிச்சயம் ஆறுதலையும், தெளிவையும் அளித்திருக்கும் என்று நம்புகிறேன்.

என் தனிப்பட்ட ஆலோசனை என்னவென்றால்: தன் வயிற்றின் மூலமாய் தங்களுக்கு பிறந்த ஒரு குழந்தையை வளர்ப்பது பெரிய காரியமல்ல, ஆனால் தாய் தந்தையில்லாத ஒரு அனாதை குழந்தைக்கு நீங்களே தாயும்,தந்தையுமாக இருந்து அந்த குழந்தையை கர்த்தருக்கென்று வளர்த்துவீர்களோயானால் அதைவிட சிறந்த செயல் வேறு இருக்கமுடியாது. இந்த சிறிவர்களில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று இயேசுகிறிஸ்து கூறி உங்களை ஆசீர்வதிப்பார்.

குழந்தையில்லாததை சாபமாக, தண்டனையாக எடுக்காதபடி தேவ சித்தத்துக்கு முற்றிலும் விட்டுக்கொடுத்து புருஷன்-மனைவி ஆத்துமாவிலும்,அதோடு சரீர சந்தோஷத்திலும் ஒரு குறைவும் வைக்காது வாழ்வதே கர்த்தருக்கு பிரியமான காரியம். இந்த ஆலோசனையை கேட்டு என் வாசகர்களில் பலர் அனாதை குழந்தையை தெரிந்தெடுத்து வளர்த்தி புதிய குடும்ப சந்தோஷத்துடனே வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை வாழ்த்துகிறேன்.

**"அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரனைச் சிறுமையாக்கி சஞ்சலப்படுத்து கிறதில்லை"** புல 3:33.

**"தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்".** 1சாமு 30:6.

ஜெபத்திற்கு பதில் கிடைக்காமல்போகும்போது ஒரு விசுவாசி பாடவேண்டிய பாட்டு:

' **அத்திமரம் துளிர்விடாமல்போனாலும்-திராட்சைசெடிகளில் பழம்உண்டாகாமல் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுபோனாலும்,வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுஇல்லாமற்போனாலும்,நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன்.** ஆபகூக் 3:17,18.

' **நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன்.** பிலி 4:11.

' **நான் இவ்வாறு சொல்வது எனக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு குறையினாலன்று, ஏனெனில் எந்நிலையிலும் போதுமென்ற மனதோடு வாழக் கற்றுக்கொண்டேன்.** பிலி 4:1.(கத்தோலிக்க வேதம்). ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## டிவி நிகழ்ச்சி

**கேள்வி:** TV நிகழ்ச்சிகளில் ஏஞ்சல் TV, ஆசீர்வாதம் TV பார்க்கவேண்டாம் ஆபத்து என்று எச்சரித்தீர்கள். அப்படியானால் வேறு எந்த கிறிஸ்தவ சேனல்களை பார்க்கலாம்?

**பதில்:** *இந்த கேள்வியை கேட்ட என் வாசகர்களாகிய நீங்களே நான் எழுதும் ஆலோசனைகளை இவ்வளவு மோசமாக விளங்கி கொள்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை. கிறிஸ்தவ டிவி சேனல்களை எல்லாம் தவறானவைகள் என்று என்றைக்காகவது குறிப்பிட்டிருக்கிறேனா?. கிறிஸ்தவ டிவி சேனல்கள் கர்த்தரால் இந்த கால கட்டத்தில் நமக்காக கிருபையாக கொடுக்கப்பட்டது ஆகும். ஆனால் அதை நடத்துபவர்கள் இவ்வளவு மோசமாக வசனத்தைவிட்டு விலகிபோவர்கள் என்று ஆரம்பத்தில் நானே நினைக்கவில்லை. நாளாக நாளாக மக்கள் இவர்களுக்கு பணத்தை அள்ளிக்கொடுக்ககொடுக்க அதை நடத்துகிறவர்களின் புத்தி பிசாசு கூறுவதற்கேற்ப செயல்பட தொடங்கிவிட்டது. அந்த ஆபத்தைத்தான் உங்களுக்கு சுட்டிக்காட்டினேன்.*

*உதாரணமாக தமிழன் டிவியில்* ***சத்தியவசனம்*** *நிகழ்ச்சியை பாருங்கள் என்றேன். நான் அதில் அடிக்கடி பிரசங்கிப்பதால் அல்ல. அந்த நிகழ்ச்சி வசனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வசனத்துக்கு நேராக உங்களை திருப்புகிறது. Rev.தியோடர் வில்லியம்ஸ், Dr.சாம் கமலேசன், சகோ.வேதநாயக சாஸ்திரியார் அவர்கள், சகோ.சுசி பிரபாகரன் அவர்கள், பேராசியர். எடிசன் அவர்கள் ஆகியவர்களின் செய்திகளை உங்களை வசனத்துக்கு நேராக அழைத்து செல்லக்கூடியது. இப்படி கூறுவதால் தமிழன் டிவியில் வரும் மற்ற கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் யாவும் நல்லது என்று நான் கூறவில்லையே!.* ***சத்தியவசனம்*** *நிகழ்ச்சி தமிழன் டிவியில் முடிந்த உடனேயே ரூஹா சகோ.ஆல்வின் தாமஸ் அவர்களின் கள்ள உபதேச ஊழிய நிகழ்ச்சிகள் வருகிறதே!. அதில் அவர் கூறுவதாவது: என்னை என் சபையில் வந்து நேரில் பார்ப்பவர்களுக்கு என்னை பார்க்கும்போதே வியாதி சுகமாகிறது என்று கூறுகிறார். அவர் கூறும் அந்த கள்ள உபதேசத்தை அதே தமிழன் டிவியில் கேட்கிறீர்களே!. அதைப்போலவே* ***நரகத்துக்கு*** *என்னை கர்த்தர் அடிக்கடி அழைத்து செல்கிறார் என்று கூறும் ஆசீர்வாத டிவி ஆலன்பால் அவர்கள் கூறும் கள்ள போதக செய்தியை ஆசீர்வாத டிவியில் பார்க்கிறீர்களே!, அதுதான் ஆபத்து. ஆசீர்வாத டிவியில் வரும் ஸ்தோத்திரங்கள் மிகவும் ஆபத்தானதும் அர்த்தமற்றதுமாகும். அதுபோலவே அவர்கள் வெளியிடும்* ***ஆயிரம் ஸ்தோத்திர பலி புத்தகத்தை*** *வாசிப்பவர்கள் யாரும் நிச்சயமாக ஆவிக்குரியவர்களாக இருக்கமுடியாது. மக்களை வேத புத்தகத்தை வாசிக்க வைக்காமல், மக்களை திசைதிருப்புகிறது. ஆயிரம் ஸ்தோத்திர பலிகள் என்ற புத்தகம். அது மக்களை வேத புத்தகத்திலிருந்தும் கர்த்தரிடமிருந்தும் பிரிக்கிறது.* ***ஆலன் பால்*** *அவர்களின் பிரசங்கம் யாவுமே* ***அவரை மட்டுமே*** *மகிமைப்படுத்தும் பொய் செய்திகளாகும். ஆசீர்வாதம் டிவியில் வரும் சில பாடல்களை பொழுதுபோக்குக்காக வேண்டுமனால் கேட்கலாம். அவ்வளவே? மற்றதெல்லாம் வேஸ்ட்!.*

அப்படியே ஏஞ்சல் டிவியில் சகோ.சாதுசெல்வராஜ், சகோ.வின்செண்ட் செல்வகுமார் இவர்களோடு சகோ.மோகன் சி.லாசரஸ் ஆகியவர்கள் கூடி பேசும் தின்னை பேச்சுக்கள் யாவும் அபத்தம். அந்த பேச்சுகள் எப்படி ஆபத்தானது என்று அடிக்கடி ஜாமக்காரனில் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன்.

இப்போது புதிதாக வந்திருக்கும் சால்வேஷன் டிவி ஓரளவு கிறிஸ்தவர்கள் பார்க்க கூடியதாக இருந்தது. சகோ.வின்செண்ட் அவர்களின் சாட்சி சாதுசெல்வராஜ்-ஆனந்ஸ்ரா ஆகியவர்களின் சம்பாஷைனைப்போன்றது. ஆனால் அதே டிவி சேனலில் FMPB மிஷனரிகளின் சாட்சிகள், அதில் வரும் பாடல்கள் சிலரின் இரட்சிப்பின் அனுபவ சாட்சிகள், கடந்த கால மிஷனரிகளின் வரலாற்று காட்சிகள் ஆகியவைகள் ஓரளவு பிரயோஜனப்படும். அதே மாதிரி ஐரேப்பா நாடுகளில் உள்ளவர்கள் காணும் Holy God Tv சேனல் ஆபத்தானது. அவர்கள் தமிழ் பாஷையில் **கோலி காட்** என்பார்கள். இந்த சேனலிலும் பிழையான உபதேசங்கள் அதிகம் காட்டப்படுகிறது.

குறிப்பாக ஜாமக்காரன் வாசகர்கள் டிவியில் கேட்கவேண்டிய செய்திகள் பார்க்கவேண்டிய டிவி செய்திகள் எது என்றால் அதிகாலையில் **தமிழன் டிவியில் 5.30மணியிலிருந்து 6மணிவரை** வரும் **திருமறை நேரம் என்ற நிகழ்ச்சி**,அதில் **Dr.பீட்டர் சாலமன்** அவர்கள் நடத்தும் வேதபாடம் ஜாமக்காரன் வாசகர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டிய, கேட்கவேண்டிய வேதபாடமாகும். அதில் அவர் குறிப்பிடும் DVDகளை விலைக்கு வாங்கி நீங்கள் நிச்சயம் பயனடையலாம்?

அதே தமிழன் டிவியில் **கிருபையின் நேரம்**(மதுரை) நிகழ்ச்சிகளும் ஆபத்தில்லாத கிறிஸ்தவ டிவி நிகழ்ச்சிகளாகும். பாஸ்டர்.சாம்செல்லதுரை அவர்களின் பிரசங்க நேரம் அவரின்(செழிப்பு உபதேசத்தைத்தவிர) மற்ற அவரின் செய்திகள் விசுவாசத்தை பெலப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

‘ **இயேசு அழைக்கிறார்** நிகழ்ச்சிகளுக்கு சொந்த டிவி சேனல் இல்லை. ஆனால் பல டிவி சேனல்களில் அவர்கள் இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்ற அவைகள் யாவும் கிறிஸ்தவர்கள் மற்றும் புற மதத்தினரிடம் பணம் பிடுங்குவதற்காகவே நடத்தப்படும் அவர்களின் பணக்கார நிகழ்ச்சிகளாகும். இப்படி கிறிஸ்தவ டிவி நிகழ்ச்சிகளில் எதை மட்டும் பார்க்கலாம்!. எதை பார்க்கக்கூடாது! என்பவைகளை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள். குறிப்பாக **ஏஞ்சல் டிவிக்காரர்** நடத்தும் **சிறுபிள்ளைகளுக்காக** நடத்தப்படும் **கனவு** நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளைகளோ நீங்களோ கண்டிப்பாக பார்க்க முயலாதீர்கள். தேவ தூதர்கள் யாவரும் நமக்காக வேலைக்காரர்களாக பணிவிடை செய்ய கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். அந்த தேவ தூதர்களை வணங்கவும், அந்த தேவதூதர்களோடு இவர்கள் அடிக்கடி பேசுவதாகவும் கூறி ஏமாற்றுகிறவர்கள். சகோ.மோகன் சி.லாசரஸ்சும் அப்படிப்பட்ட தவறான உபதேசத்தை கூறும் அவர்களின் அந்த கூட்டத்தை சேர்ந்தவர் ஆகும். ஆகவேதான் சகோ.மோகன் சி.லாசரஸ் Bless CMC(Vellore)க்காக ஜெபம் நடத்த தகுதி யில்லை என்று எழுதினேன். நான் எழுதுவதை சரியாக புரிந்துக்கொள்ளுங்கள். அரைக்குறையாக புரிந்துக்கொண்டால் கேள்விகேட்ட உங்களைப்போல் என் எழுத்தை தவறாக விளங்கிக்கொள்ள நேரிடும். ❖❖❖❖❖❖❖❖❖❖❖

# புள்ளிவிவரம்:

**கேள்வி:** டாக்டர் ஐயா, கீழே நான் குறிப்பிட்ட தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறித்து புள்ளி விவரம் ஆகும். இது 26 ஆகஸ்ட் 2015ம் தேதி வெளிவந்த தினசரி செய்திதாளில் காணப்பட்டது. இத்தனை வருடமாக ஊழியம் செய்தும் இந்த அளவுதான் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியா? மனதுக்கு வேதனையாக இருக்கிறது.

| | | |
|---|---|---|
| முழு இந்தியா | 2001 | 2011 ஆண்டுகளில் |
| தமிழ்நாடு | 2.30% | 2.30% |
| தமிழ்நாடு | 6.10% | 6.10% |
| கேரளா | 19.00% | 18.40% |
| ஆந்திரா | 19.00% | 18.40% |
| கர்நாடகா | 1.90% | 1.90% |
| குஜராத் | 0.60% | 0.50% |
| பாண்டிசேரி | 6.09% | 6.03% |

இதில் எந்த மாற்றமில்லையே?

**பதில்:** *இது அரசாங்க கணக்கெடுப்பு ஆகும். **அரசாங்க சலுகைகள் கிடைக்காமல் போகுமே** என்ற பயத்தில் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று வெளியே கூற பயப்படுபவர்கள் அரசாங்க கணக்கெடுப்பின் சமயத்தில் தாங்கள் கிறிஸ்தவர்கள் இல்லை என்று வெளிப்படையாக கூறியவர்களாகும். அப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள்.*

*கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் FMPB மிஷனரிகள் IEM மிஷனரிகள் மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் கோடிக்கணக்கில் கூறமுடியும். குஜராத்,ராஜஸ்தான்,உபி,பீகார்,மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டும் ஒவ்வொரு மாதமும் 1000கணக்கில் இயேசுவை ஏற்றுக்கொண்டு விக்கிரங்களை குழிதோண்டி புதைத்து அல்லது எரித்து ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகம். ஆயிரக்கணக்கில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு சுதேச மிஷனரிகளையே பாஸ்டர்களாக்கி சபைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.*

*இப்படி வெளிப்படையாக தங்களை கிறிஸ்தவர்களை என்று கூறினாலும் அதை அரசாங்க அதிகாரிகள் பதிவு செய்வதில்லை.*

*இப்படி ஒரு பக்கம் மிகப்பெரிய கிறிஸ்தவ சபை வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கின்றன.*

*ஆனால் CSIயில் சில டையோசிஸ்களில் ஜாதி கணகெடுப்பு நடத்திக்கொண்டிருக்கும் வெட்கக்கேடும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ன செய்ய?.*

*ஜாதி என்ற ஒரு வட்டத்திலிருந்து நம் தமிழ்நாட்டு கிறிஸ்தவர்கள் எப்போது வெளிவருகிறார்களோ அப்போதுான் சகல ஜனத்துக்காவும் தன் இரத்தத்தை சிந்தின நம் கர்த்தரின் மனம் சந்தோஷப்படும். இல்லையானால் இன்னும் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுவைத்தான் நாம் காணமுடியும்.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# குழந்தை இயேசு:

**கேள்வி:** நான் பரம்பரை RC ரோமன் கத்தோலிக்க சபையை சேர்ந்தவன். அதில் நாங்கள் குடும்பமாக குழந்தை இயேசு தேவலாயத்துக்குதான் போகிறோம். குழந்தை இயேசுவின் பெரிய புகைப்படம் என் வீட்டில் வைத்து மெழுகுதிரி வைத்து தினசரி அதிகாலை-இரவு நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம். ஆனால் எங்கள் குடும்பத்தில் சமாதானம் இல்லை. பிள்ளைகள் தங்கள் இஷ்டம்போல் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் தறுதலைகள்போல் ஜீவிக்கிறார்கள். **குழந்தை இயேசு** தயவு எங்களுக்கு கிடைக்கவில்லை.

**உங்கள் பிரசங்கத்தை தமிழன் டிவியில் சத்தியவசனம்** நிகழ்ச்சியில் தொடர்ந்து காண்கிறோம். அவர்களிடம் உங்கள் விலாசம் கேட்டு பெற்றோம். எங்களுக்கு ஆலோசனை கூறவும்!.

**பதில்:** நீங்கள் ஆராதிக்கும் **குழந்தை இயேசு** உங்களுக்கு தெய்வமாக இருக்கும்வரை ஒரு மாற்றமும் வராது.

எந்த குழந்தையும் பேசவும் முடியாது,

குழந்தையால் வாயில் விரலை வைத்தால் கடிக்கவும் தெரியாத ஒரு குழந்தை உங்களுக்கு எப்படி உதவ முடியும்.

குழந்தை இயேசு வளர்ந்து வாலிபனாகி உலகம் அனைத்துக்கும் சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்தி மரித்து உயிர்தெழுந்து இப்போதும் உயிரோடு இருக்கிறார்.

அந்த இயேசு கிறிஸ்துவை அறிந்து, புரிந்து அவரிடம் நீங்கள் வரும்வரை **உங்கள் வாழ்க்கையில் எந்த அற்புதமும்** நடைபெறாது.

குழந்தை இயேசுவை விட்டுவிட்டு வளர்ந்த உயிரோடிருக்கும் இயேசுகிறிஸ்துவிடம் ஆராதிக்க முயலுங்கள்.

நிச்சயம் நீங்கள் எதிர்ப்பார்க்கும் மாற்றம் உங்கள் வாழ்க்கையில்,குடும்பத்தில் உண்டாகும்.

அப்படியே **மேரி அம்மாவையும்** ஆராதிப்பதை விட்டுவிடுங்கள்.

அந்தோணியாரையும் விட்டுவிடுங்கள்.

மரியாள், அந்தோணியார் யாவரும் இறந்துபோனவர்கள். அவர்கள் உங்களுக்கு ஒரு அற்புதத்தையும் செய்யமுடியாது.

கர்த்தருடைய வேதத்தை படியுங்கள்.

**இயேசுகிறிஸ்து மரித்தார்,**

**ஆனால்,**

**உயிரோடு எழுந்து இப்போதும் உயிரோடு இருக்கிறார்.**

ஆகவே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை மட்டும் ஜெபத்தில் தொடர்புக்கொள்ளுங்கள்.

அந்த குழந்தையை தொல்லைப்படுத்தாதீர்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:

**USA:** 2015 **OCT** 6 to 9 - **NEW YORK,IOWA,**
11,12 - **CHICAGO- Rev.Godwin - 163 09631297**
**CANADA**: 2015 **OCT** 12 to 18 - **TORANTO** - CANADA - Pastor.Manoharan -905-8370051
- Mr. DOMINIC - 416-8757892
**ABU DHABI: OCT** 19 to 1 NOV -CSI **ABU DHABI** CSI MALAYALA CONGREGATION - Rev.Paul - 00971504120123
**ENGLAND : NOV** -2 to 3 - **LONDON** -Bishop.REGINOLD
- 44 208 3660583,07956478093
**LONDON :** NOV -- 4th - Mr.Doni - 44(o) 2082525586
**IRELAND :** NOV -- 5th - Mr.JOHN WESLY - 353-894151538

**DUBAI :**

2015 **NOV** 23 to 29 - **DUBAI** TAMIL CSI CONGREGATION
- Vice President - 971552728146,
- Mr.Singaratnam-971504440679

# பேதுருவும் ~ சாவியும்

## பரிசுத்த ஆவி - அந்நியபாஷை

### ("முதலாவது யூதருக்கும், இரண்டாவது புறஜாதிகளுக்கும்")

**இயேசு** பிலிப்பு செசரியா திசைகளில் வந்தபோது, தமது சீஷரை நோக்கி, மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் உம்மை எலியா என்றும், எரேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக **நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரானாகிய சீமோனே நீ பாக்கியவான் மாம்சமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. **பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை,** நான் உனக்கு தருவேன், பூலோகத்தில் நீ **கட்டுகிறது** எதுவோ அது பரலோகத்திலும் **கட்டப்பட்டிருக்கும்.** பூலோகத்தில் நீ **கட்டவிழ்ப்பது** எதுவோ அது பரலோகத்திலும் **கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்** என்றார். (மத் 16:13-19).

விசுவாசத்தை உண்டாக்கும் தேவ வசனத்தை தன் கேள்விக்கு பதிலாக பேதுருவிடம் கேட்டதினால், பரலோகம் போகும் சிலாக்கியத்தை உண்டாக்கும் **திறவுகோல்களை**(Keys) இயேசு சீமோன் பேதுருவிடம் கொடுத்தார் (மத் 16:19).

சிலர் இந்த அதிகாரம் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்று (மத் 18:18) வாக்கியத்தை சிலர் காட்டுவார்கள், **திறவுகோலின்** விசேஷத்தை கவனிக்கமாட்டார்கள்.

புதியதாக ஒரு வீட்டையோ ஒரு கட்டிடத்தையோ அல்லது ஸ்தாபனத்தையோ முதலில் **திறந்து வைக்க** ஒரு முக்கிய மனிதரை அழைத்து திறந்து வைக்கசெய்கிறோம். பிறகு நாம் அதை உபயோகப்படுத்துகிறோம். அந்த விதமாகவே பேதுருவுக்கு இயேசு இந்த சிலாக்கியத்தை கொடுத்தார். பேதுரு மனிதர்களை இயேசுகிறிஸ்துவை தேவன் என்று விசுவாசிக்க வைத்து அவர்களுக்கு பரலோகம் போகும் சிலாக்கியம் **பேதுரு மூலம் ஆரம்பித்து வைக்கப்படவேண்டும்.**

மற்றும் ஓர் கட்டளையை நாம் வேதத்தின் நெடுக சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கவேண்டும்.

**யூதர்களுக்கு முதலிடம்** தரப்பட்டுள்ளது.

1. இஸ்ரவேல் என்னுடைய குமாரன் என் சேஷ்டபுத்திரன் (யாத் 4:22)

2. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்கு சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார். (உபா 7:6)

3. தன் மகளை சுகமாக்க இயேசுவினிடம் வேண்டின கிரேக்க ஸ்தீரிக்கு இயேசு சொன்னது: முந்தி பிள்ளைகள் திருப்தியடையட்டும், பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல (மாற் 7:26,27).

4. இயேசு சமாரியப்பெண்ணிடம் இரட்சிப்பு **யூதர்கள் வழியாய்** வருகிறது என்றார். (யோ 4:22)

5. முன்பு **யூதரிலும்** பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு (ரோ1:16)

மேலே குறிப்பிட்டபடி மக்களுக்கு விசுவாச கதவை பேதுரு தனது பிரசங்கத்தின் மூலம் அறிவிக்க வேண்டும். அதிலும் அதுவும் **முதலாவது சுவிசேஷம் யூதர்களுக்கே,** பேதுரு தனது பிரசங்கம் மூலம் அறிவித்திடவேண்டும்.

இந்த அடிப்படையில்தான் பேதுரு முதலாவதாக யூதர்களுக்கு இயேசுவின் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். ஆகையினாலே யூதரின் பிரதான பண்டிகையாகிய பெந்தேகோஸ்தே என்னும்(லேவி 23:15,16) ஐம்பதாம் நாள் வந்தபோது, அப்போஸ்தலர்கள் தங்களுக்கு இயேசு கூறின கட்டளைபடி(அப் 1:5) (எருசலேமில்) ஓரிடத்தில் கூடி வந்திருந்தனர். (அப் 2:1) - அவர்கள் ஒருமனப்பட்டு ஓர் இடத்தில் வந்திருந்தனர். (அப் 2:2) - பலத்த காற்று, இடி முழக்கம், பரிசுத்த ஆவி பொழிவின்தன்மை, இவைகள் யாவும் பரவலாக இருந்த மக்களை ஒன்று சேர்க்க தேவனால் உண்டாக்கப்பட்ட அடையாளம் ஆகும். (அப் 2:5)-வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள்(யூதர்கள் சகல தேசத்திலும் எப்படி யூதர்கள் சிதறிப்போனார்கள்)

‘ யூதா-ரெகொபெயாம்ராஜாவானபோது(1 ராஜ 12:17) - ராஜ்யம் இரண்டாகப்பிரிக்கப்பட்டது ரெகொபெயாமை பின்பற்றின தாவீதின் வம்சம் யூதராஜ்யம் ஆனது - அவர்கள் எருசலேமை ஆண்டனர்.

‘ சமாரியர்- யெரோபெயாமை பின்பற்றினவர்கள் சேமேர் மலையை மையாக கொண்டு விக்கிரவணக்கம் செய்து சமாரியர் ஆயினர். பிறகு அவர்கள் அசீரியருக்கு அடிமையாயினர்(2 இராஜா 17:6) தாவீதின் சந்ததியில் வந்த ரெகொபெயாமின் வழியில்வந்த சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரேதமாக கலகம் பண்ணினதினால் பாபிலோன் ராஜாவாகிய நெபுக்காத்நேச்சர் யூதராஜ்யத்தை முற்றுகை போட்டான். முற்றுகையின் நாலாம் மாதம் யூதர் கடுமையான பஞ்சத்தினால் உயிர்தப்பி பிழைக்க ராஜாவின் தோட்டத்தின் வழியாய் இரவில் எல்லா இராணுவமும், மக்களுக்கும் பல நாடுகளில் சிதறி தஞ்சம் புகுந்தனர். இப்படி ஓடினவர்களில் ஒரு கூட்டத்தினர் இந்தியாவுக்குள் வந்த ஆரியர் என எண்ணலாம்.அதே போல் பாபேல் கோபுரம் கட்டும்போது ஆதி 11:7,9 சிதறிப்போன மக்கள் இந்தியாவுக்குள் வந்தவர்கள் திராவிடர்கள் என எண்ணவாய்ப்பு உண்டு. இதை இந்தியாவில் சென்னையில் உள்ள புலவர் தெய்வநாயகம்(திராவிடசமயம்) அவர்களிடம் தெரிவித்தற்கு இக்கருத்தை மறுக்கிறார். இந்த விதமாக(2 ராஜா 25:4) சிதறிப்போன யூதர்களின் பின் சந்ததியினர் தங்கள் முன்னோரின் பாரம்பரியப்படி எருசலேம் பண்டிகைக்கு வருகிறவர்கள் இவர்களே(அப் 2:5). இந்த மக்களே அன்று(அப் 2:5-12)- பிரமித்து நம்பாஷையில் தேவனுடைய மகத்துவங்களை பேச கேட்கிறோம் என்றார்கள். (அப் 2:13) இந்த வசனத்தில் மற்றவர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் எருசலேம்,யூதேயா,கலிலேயா முதலான நாடுகளில் வசிக்கும் உள்ளூர் மக்கள் அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் அன்று பேசின பாஷைகள் விளங்காததினால் பிதற்றுகிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள்.(அப் 2:13). இந்த விதமாக பேதுரு தனக்கு இயேசு கொடுத்த திறவுகோல்களில் ஒன்றை முதலாவதாக யூதர்களுக்குள் உபயோகப்படுத்தி பரலோக வாசலை திறந்து அவர்களக்கு வைத்தார்(அப் 2:1-4).

‘ அடுத்து பேதுரு புறஜாதிகளுக்குகிரேக்கர் முதலான அந்நியமக்களுக்கு மற்ற திறவுகோலை உபயோகப்படுத்தவேண்டும். ஆனால் நடந்தது வேறு.

எருசலேம்சபையில் பந்தி விசாரிப்புக்காக ஏழுபேரை உதவிக்காரராக ஏற்படுத்தினார்கள். அவர்களில் ஸ்தேவான் என்பவனும், பிலிப்பு என்பவனும் முக்கியமானவர்கள் ஸ்தேவான் செய்த அற்புதங்களையும் பேசின ஞானத்தையும், யூதர்கள் எதிர்க்கமுடியாமல் மூப்பர்களை தூண்டிவிட்டு ஸ்தேவானை கொலை செய்தார்கள். இதனால் உண்டானகலகத்தினிமித்தம் அப்போஸ்தவர்களை தவிர மற்றவர்கள் அனைவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறிப்போய் அங்குள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.பிலிப்பென்னும் உதவிக்காரன் சமாரியாவுக்குவந்து(சமாரியர் யூதரிலிருந்து பிரிந்து போனவர்கள்) அங்குள்ள ஒரு பட்டணத்தில் போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவை குறித்து பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை சமாரியர் கேட்டு கண்டு அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டு கவனித்தனர். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் அவர்களை விட்டு நீங்கின. அநேக திமிர்வாதகாரரும், சப்பாணிகளும் குணமானார்கள். அந்த பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

தேவனுடைய ராஜ்யத்திற்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்து புருஷர்களும்,ஸ்தீரிகளும் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு **பேதுருவையும், யோவானையும்** அவர்களிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் வந்தபோது அவர்களில் ஒருவனும் **பரிசுத்த ஆவியை** பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாக கண்டு அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்களை **பரிசுத்த ஆவியை** பெற்றார்கள்.

**சமாரியர் பிலிப்புவினால் பரிசுத்த ஆவியை பெறாததற்குக்காரணம்:** நாம் முதலாவதாக கண்டபடி **பரிசுத்தஆவியை கொடுக்கும்** அதிகாரத்தை, இயேசு **பேதுருவிடம்** கொடுத்திருந்தார் என்று கண்டோம். மற்றும் அந்த அதிகாரம் **முதலாவதாக பேதுரு யூதர்களுக்குள்** திறந்துவைக்கவேண்டும். அந்தப்படி பேதுரு யூதர்களுக்கு பெந்தேகோஸ்தே தினத்தில் வசனத்தை தன் வாயால் சொல்லி(அப் 2:14,31,38. 15:7) திறந்து வைத்து,(பிறகு **புறஜாதி மக்களுக்கும்**, பேதுரு திறந்து வைக்கும்முன், எருசலேமில் உண்டான, கலகத்தினிமித்தம் சிதறி வந்த பிலிப்பு, சமாரியருக்கு சுவிசேஷம் கொன்னதினால், அவனால் அற்புதங்கள் செய்தல்தவிர சமாரியருக்கு பரிசுத்த ஆவியை புறஜாதிகளுக்கு ஆரம்பித்து வைக்கும் அதிகாரம் **பிலிப்புக்கு இல்லை,** ஆனால் யூத மதத்தில் இணைந்துவிட்ட கந்தாகே மந்திரியாகிய எத்தியோப்பியனும் அவர்களில் அப் 2:10ல் உள்பட்டவன், மேலும் யூத மதத்தை அனுசரிக்கிறவன் என்பதற்கு அத்தாட்சி, அந்த எத்தியோபியன் எருசலேம் போய் தேவனை தொழுது கொண்டு திரும்பி வரும்போது **வேதசுருளை** படித்துக்கொண்டுவந்தான். (அப் 8:28)

‘ **2வது சாவி:**(சமாரியருக்கு - புறஜாதிகளுக்கு) பேதுருவே வந்து பிரசங்கித்திருக்கவேண்டும். மாறாக பிலிப்பு வந்து பேசினதால், பிலிப்பு **தேவனால் ஆரம்பித்து வைக்க நியமிக்கப்படாதவன்** என்பதால் பரிசுத்தாவியின் நிறைவு உண்டாகாமல் இந்த தடை ஏற்பட்டது.

அதனால் பேதுரு **புறஜாதிகளுக்காக** கொர்நெலியுவினால் அழைக்கப்பட்ட புறஜாதிகளுக்காக பரிசுத்த ஆவியானவரின் ஆரம்ப விழாவை தனக்கு இயேசுகொடுத்த **அதிகாரமாகிய அடுத்த இரண்டாவது சாவியை** உபயோகப்படுத்தி திறந்து வைத்தார் அப் 10:1-45).

## 1.நாம் பெந்தேகோஸ்தே கிறிஸ்தவர்களா?

தேவன் யூதராகிய இஸ்ரவேலரை தமக்கென்று தெரிந்துக்கொண்டார்.

இஸ்ரவேல் என்னுடைய குமாரன் என் சேஷ்டபுத்திரன். யாத் 4:22.

நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம். பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்கு சொந்தமாயிருக்கும்படி தெரிந்துக்கொண்டார்.உபா 7:6.

அவர்கள் இஸ்ரவேலரே புத்திர சுவிகாரமும் மகிமையும் உடன்படிக்கையும் நியாயப்பிரமாணமும் தேவாராதனையும் வாக்குத் தத்தங்களும் அவர்களுடையவைகளே பிதாக்களும் அவர்களுடையவர்களே மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தவரே.ரோம 9:4,5.

அடுத்து இயேசு தமது சீஷர்களிடம் நீங்கள் **புறஜாதியார்** நாடுகளுக்குப்போகாமலும் **சமாரியர்** பட்டணங்களில் பிரவேசியாமலும் காணாமல் போன ஆடுகளாகிய **இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப்** போங்கள். போகையில் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார்.மத் 10:5,6. சமாரியப்பெண்ணிடம் இயேசு - **இரட்சிப்பு யூதர்கள் வழியாய்** வருகிறது என்றார். யோ 4:22.

இயேசு தமது சீஷரிடம் **மனந்திரும்புதலும்,** **பாவமன்னிப்பும்** எருசலேம் தொடங்கி சகல **தேசத்தாருக்கும்** அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டும் என்றார். லூாக் 24:47.

முன்பு **யூதரிலும்** பின்பு **கிரேக்கிலும்** விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு ரோம 1:16,2:9,10. மேலே குறிப்பிட்ட வேத வசனங்களின்படி **முதலாவதாக யூதர்களுக்கே** இரட்சிப்பை அறிவிக்கவேண்டும் என்பது தேவனுடைய தீர்மானம் என காண்கிறோம். அடுத்து இந்த நற்செய்தியை அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுருவின் வாயினாலேதான் மக்களுக்கு **ஆரம்பித்து வைக்கவேண்டும்.** என்பதும் தேவனின் திட்டம்.மத் 16:19. அதாவது முதலில் **யூத** மக்களுக்கு பேதுரு ஆரம்பித்து வைக்கவேண்டும் அதன்பிறகு புறஜாதிகாரால் யாருக்காவது பேதுரு ஆரம்பித்து வைக்கவேண்டும்.

**மறுபடியும் அந்த சம்பவத்தை ஞாபகப்படுத்திக்கொள்வோம்:**

இயேசு தமதுசீஷர்களை பார்த்து நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார் சீமோன் பேதுரு பிரத்தியுத்தரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

இயேசு அவனை நோக்கி நீ பாக்கியவான். மாம்சமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல் அதை மேற்கொள்வ தில்லை. **பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை** நான் உனக்குத்தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

**(11). மற்ற அப்போஸ்தலர்களுக்கு இல்லாத அதிகாரத்தை** இயேசு **பேதுருவினிடம்** கொடுத்தார். மற்ற அப்போஸ்தவர்களுக்கும் பேதுருவுக்கும் பொதுவாக கூறியதாவது - பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.மத் 18:18. பேதுருவினிடம் விசேஷித்த அதிகாரமாகிய பரலோக ராஜ்யத்தை திறக்கும் அதிகாரமாகிய **சாவியை** அதாவது பரலோகராஜ்யம் **போவதற்குரிய** விசுவாசத்தைஏற்படுத்தும் இரட்சிப்பின் வசனங்களை பேதுரு தன் வாயால் சொல்லி **ஆரம்பித்துவைக்கும்** அதிகாரமாகிய **சாவியை** இயேசு பேதுருவினிடமே கொடுத்தார். மத் 16:19.

இந்த அதிகாரத்தை உடையவராக சீமோன் பேதுரு பெந்தேகோஸ்தே தினத்தில் **முதலாவதாக** அப் 2:5ல் என்று குறிக்கப்பட்டப்படி முதலில் **யூத ஜனங்களுக்கும்** அப் 2:14,37,38 திறந்து வைத்தார். பெந்தேகோஸ்தே தினத்தில் **யூதர்களுக்கு** அடுத்து **புறஜாதிக்காரர்களுக்கு** பேதுருவே திறந்துவைக்க வேண்டும். ஆனால் எருசலேமில் ஸ்தேவான் மரணத்தினால் உண்டான கலவரத்தினால் உதவிக்காரனாகிய பிலிப்பு, சிதறிப்போனவர்களில் ஒருவனான பிலிப்பு வந்து அப் 8:1-17ல் **சமாரியருக்குப்** பிரசங்கித்தான். அற்புதங்கள் நடந்தன, ஆனால் **பரிசுத்த ஆவியில்லை.** பேதுருவும், யோவானும் வந்து கைகளை **வைத்தார்கள். பேதுருதன்வாயால்** சமாரியருக்கு சுவிசேஷம் அறிவிக்கவில்லை.

இதனாலேயே செசரியா பட்டணத்தில் வசித்த **கொர்நெலியு** என்னும் ராணுவ தலைவன் (புறஜாதியான்) தேவதூதனால் அறிவிக்கப்பட்டு பேதுருவுக்கு ஆள் அனுப்பி செசரியாவுக்கு வரவழைத்து பேதுருவின் மூலமாக இரட்சிப்பின் வார்த்தைகளைக்கேட்ட கொர்நெலியுவின் வீட்டாரும், உறவின் முறையாருக்கும் விசேஷித்த சிநேகிதரும் இரட்சிப்பின் வசனங்களை கேட்டு **பரிசுத்த ஆவியை** பெற்றனர்.

ஆக இந்த **பரிசுத்த ஆவியானவரின்** பொழிவு முதலாவது **யூதர்களுக்கு** பெந்தேகோஸ்தே நாளில் அப் 2:2ல் எருசலேமின் ஓரிடத்திலும், **அடுத்த பொழிவு** அந்நியபுறஜாதிகாரராகிய புறஜாதிகளுக்காக **கொர்நெலியுவின் வீட்டிலும்** நடைபெற்றது. முதலாவது யூதர்களுக்கு பொழியப்பட்டது.

**அந்நியபாஷை ஏன் வந்தது** - அப் 2:13ல் எருசலேம், யூதேயோ, கலிலியோ தேச மக்களுக்கு சீஷர்கள் பேசிய அந்த பாஷை விளங்காததினால்(அவிசுவாசம் போக 1 கொ 14:22 வசனத்தை வாசிக்கவும்).

அப் 10:44ல் **பாஷை ஏன் வந்தது?** பேதுருவோடு வந்த மூன்று யோப்பா பட்டணத்து மனிதர்கள் **அவிசுவாசிகள்.** அப் 10:23,46.11:12. அந்நியபாஷை **அவிசுவாசிகளுக்கும்** மாதிரியாக பேசப்பட்டது. அதிலும் தேவனின் மகத்துவம் பேசப்பட்டது.

அப் 19:6ல் **பாஷை வந்தது** ஆனால் **விளக்கம் சொன்னார்கள்.** 1 கொரி 14:27.

**முதலாவது** பரிசுத்த ஆவி பொழிவு பெந்தேகோஸ்தே நாளில் **யூதர்களுக்கு பேதுரு** பிரசங்கிக்கும் போது **இரண்டாவது** ஆவியின் பொழிப்பு **புறஜாதிகாரனாகிய** கொர்நெலியு வீட்டில் **பேதுரு பிரசங்கிக்கும்** போது வந்தது. இப்படியிருக்க நாம் எந்த கிறிஸ்தவர்கள்?.

(சகோ.ஸ்டீபன் ஆபிரகாம். வியாசர்பாடி.சென்னை)

✞✞✞✞✞✞✞✞✞✞✞✞✞✞✞✞✞

**ஜாமக்காரன் வாசகர்கள் ஜாமக்காரனுக்கு செய்யவேண்டிய உதவி:**

உங்கள் ஊரில் அற்புத ஊழியர்கள் நடத்தும் எந்தக்கூட்டங்களில் **சர்க்கரைவியாதி** சுகமானது, **கேன்சர் வியாதி** சுகமானது, **எய்ட்ஸ் வியாதி** சுகமானது என்று மேடையேறி சாட்சி சொன்னவர்கள் அல்லது பத்திரிக்கையில் புகைப்படத்துடன் வெளிவந்த சாட்சியை எழுதியவர்களின் **முழுவிலாசத்தை** மட்டும் எப்படியாவது பெற்று எனக்கு அனுப்புங்கள்.

**பொய் பேசும் ஊழியர்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு ஜாமக்காரனிலும் ஒரு பக்க செய்தி வெளியிட பலர் கேட்டுள்ளார்கள். அது கிறிஸ்தவர்களிடையே ஒரு விழிப்புணர்வை உண்டாக்கும். இப்படி ஜாமக்காரனில் அவைகளை வெளியிடுவதின் மூலம் அந்த குறிப்பிட்ட **ஊழியர்களும்** அந்த பொய்யை அல்லது **பொய்யான வெளிப்பாட்டை** அவர்களின் மேடைகளில் கூற தயங்கலாம். அது அவர்களுக்கும் நல்லது. கர்த்தரின் நாமம் மைதானத்தில் பொது மக்களிடையே தூஷிக்கப்படமலிருக்கும். இதை ஒரு ஊழியம்போல வாசகர்கள் யாவரும் செய்யுங்கள்.

# கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் **கிறிஸ்தவசபைகள்** தாக்கப்படுகின்றன. **சபை ஊழியர்கள்,மிஷனரிகள்** தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல,**மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள்** என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும்,விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும்,சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில்செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து **UNITED CHRISTIAN FORUM** என்ற பெயரில் **உதவி இணைப்பு** Help Line தொடங்கியுள்ளார்கள். உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் **1800 2084 545** என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.

# *வாலிப பெண்களுக்கான விசேஷ செய்தி*
# *ஆண்களோடுள்ள உறவுகள்*

நன்றி: **Dr. ANNI POONAN M.B.B.S.**

**நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்றோ நாளையோ ஆண் பிள்ளைகள் உங்களிடம் ஆர்வம் காண்பிக்கத் தொடங்குவார்கள். இவர்கள் உங்கள் கல்லூரிகளில் படிப்பவர்களாயிருக்கலாம். உங்கள் அக்கம் பக்கத்து வீடுகளில் வாழ்பவர்களாயிருக்கலாம். இவர்களோடு எப்படிப் பழகவேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வது அவசியம். பெண்கள் சிறப்பாகக் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை மட்டுமே இங்கு குறிப்பிட விழைகிறேன்.**

**பழங்காலத்தில் சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் நடந்துவிடும். இக்காலத்தில் பெண்கள் உயர்கல்வி பெற நினைப்பதால் சற்று காலம் தாழ்த்தியே அவர்களுக்கு திருமணம் பற்றிப் பேசுகின்றனர். பட்டப்படிப்பில் அல்லது ஒரு பயிற்சியில் செலவிடப்படும் இந்தக் காலகட்டத்தில்தான் பெண்பிள்ளைகள் ஆண் பிள்ளைகளோடு பழக வேண்டியதாயிருக்கிறது. அப்பொழுது பல சோதனைகளுக்கு அவர்கள் ஆளாகிறார்கள். தங்கள் கவர்ச்சித் தன்மையின் காரணமாக திருமணஎண்ணம் இல்லாமல் அவர்கள் ஆடவரின் கவனத்தைக் கவர நினைக்கிறார்கள். இச்சோதனைக்கு இவர்கள் இடமளிக்கும் போது அது பேராபத்தாக முடிகிறது.**

**மனவெழுச்சி ஆடவர்களைவிடப் *பெண்களிடம்,தான் அதிகநாள் நீடித்திருக்கும்* என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஓர் இளைஞன் ஒரு பெண்ணை நேசித்து விட்டு *அவளை எளிதாக மறந்துவிடுவான்*. பிறகு இன்னொரு பெண்ணை நேசிக்க தொடங்குவான். இதனால் அவன் உணர்ச்சி வாழ்க்கைக்குப் பெருமளவில் ஊறுவிளைந்து விடாது. *பல இளைஞர்கள் பெண்களோடு பழகுவது வெறும் உடல் உறவுக்காகவே*. எவ்வளவுக்கு இது இயலுமோ அவ்வளவுக்கு அவர்கள் பழக்கமும் நீடிக்கும். அன்பு உணர்ச்சி கொஞ்சங்கூட இல்லாமல் அவர்களால் பழகமுடியும். ஆனால் ஒரு பெண் அத்தகைய உறவு கொள்ளும்போது *அன்பு உணர்ச்சி* நிரம்பியவளாக இருக்கிறாள். தான் நேசித்திருந்த ஆண்பிள்ளையின் அன்பிலிருந்து, உணர்ச்சி நிலையிலிருந்து விடுபடுவது அவளுக்கு மிகவும் சங்கடமான காரியம். இச்சங்கடத்தைச் சில பெண்கள் திருமணமானபிறகும் உணர்ந்து அல்லது நினைத்துக் கொண்டேயிருப்பார்கள். திருமண வாழ்க்கையை மகிழ்ச்சியற்றதாக்கிவிடகூடிய ஒரு விஷயம் இது. எனவே இங்கு எச்சரிப்பு தேவைப்படுகிறது.**

**தொடுஉணர்ச்சி வழியாக வரும் சோதனைகள் மிகப் பயங்கரமானவை என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது. எனவே எந்த ஆண்பிள்ளையும் *உங்கள் கையைப் பற்ற நீங்கள் அனுமதிக்கக் கூடாது. முத்தமிடவும் கொஞ்சவும் இடம் கொடுக்ககூடாது*. இவ் விஷயங்கள் நடைபெற்றுவிட்டால் பிறகு வீணான கற்பனைகள் மனதில் தோன்ற ஆரம்பிக்கும். ஒரு காரியத்தை அடுத்து மற்றொரு காரியம் எளிதாக நடந்துவிடக்கூடும்.**

**இன்னொரு காரியத்தையும் நன்றாக நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஓர் ஆண்பிள்ளையோடு உள்ள நட்பு முறிந்துபோகும்போது பெண் பிள்ளைக்கே அதிக தொல்லை. உன்னை விட்டுவிட்டு வேறொரு பெண்ணை மணந்து கொள்வது அவனுக்குச் சுலபம். ஆனால் உனக்கு அப்படியல்ல. காலமெல்லாம் *உன்மேல் ஒரு களங்கம் நிற்கும்*. அதன் விளைவாக உனக்கு என்றுமே ஒரு துணைவர் கிட்டாமல் போய்விடலாம். இந்தியாவைப் பொருத்தவரை இது பெருமளவுக்கு உண்மை. இங்கு நான் தவறான முறையில் ஆண்களுடன் பழகிய பெண்களைக் குறித்துப் பேசவில்லை. ஓர்**

ஆண்பிள்ளையுடன் பழகிய பெண்களைக் குறித்துப் பேசவில்லை. ஓர் ஆண்பிள்ளையுடன் **எந்தத் தவறுமின்றி** பழகியிருக்கும் பெண்களைக் குறித்து மட்டுமே பேசுகிறேன். அந்த உறவு பெரும்பாலும் கடிதத் தொடர்பளவில் அல்லது தொலைபேசி வழி இருந்தாலும்கூட அவர்கள் பிறகு கஷ்டப்படுவார்கள். இந்த உறவு பற்றிய காரியம் (கடித உறவு, அல்லது தொலைபேசி தொடர்புகூட) மற்றவர்களுக்குத் தெரியவருமானால் பெண்களின் வாழ்க்கைக்குத் தொல்லை விளையும். இங்குப் பெண்கள் தங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதுபற்றி எண்ணிப் பார்க்கவேண்டும்.

தொடக்கத்தில் கவலையீனமாயிருந்துவிட்ட பெண்கள் பலர் தங்கள் மதிப்பை இழந்து போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியம் அவர்கள் சாட்சியைக் கெடுத்துப் போட்டதோடல்லாமல் கர்த்தருடைய திருப்பெயருக்கும் பெரிய இழுக்குண்டாக்கி யிருக்கிறது. பெண்களைப் பெலனற்ற பாண்டங்கள் என்றும், எளிதில் வஞ்சிக்கப்பட்டு விடுவார்கள் என்றும் வேதம் குறிப்பிடுவதில் (பேதுரு 3:7 1 தீமோ. 2:14) அர்த்தம் இல்லாமலில்லை.

திருமணம் பற்றி உடனடியாகப் பேசப்படவிருக்கிறது என்று அறியும் காலம்வரை ஆண்பிள்ளையிடம் அதிகம் பழகாமலிருப்பது நல்லது. இதற்கு இன்னொரு காரணமுமுண்டு. திருமணமாகாமலிருக்கிற அந்த வருடங்களே நீங்கள் சுதந்திரமாக, எவ்வித சங்கடமுமின்றி ஆண்டவருடைய சேவையில் ஈடுபடக் கூடிய வருடங்களாகும். திருமணமான பிறகு உங்கள் நேரம் உங்களுக்குச் சொந்தமல்ல. அந்த வருடங்களை ஆண் பிள்ளைகளோடு பழகுவதில் செலவிடுவீர்களேயானால் கடவுள் ஊழியத்திற்கு நீங்கள் கொடுக்கக்கூடிய முக்கியமான ஒரு பருவம் வீணடிக்கப்பட்டுவிடும். பிசாசு உங்களைப் ஆவிக்குரிய பாதையை விட்டுவிலகச் செய்யாதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இந்த விஷயத்திற்குத் தொடர்பாக இரண்டு அறிவுரைகளைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். ***திருமணமாகாத*** எந்த ஆடவரிடமும் சென்று உங்கள் ஆவிக்குரிய காரியங்களுக்கு ஆலோசனை கேட்காதீர்கள். மணமான பெரியவர்களிடமோ அல்லது மற்றொரு பெண்ணிடமோ அறிவுரை கேட்பது சாலச் சிறந்தது. மற்றொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். திருமணமான எந்த ஆடவரிடமும், அதாவது அந்த குறிப்பிட்ட ஆடவரின் மனைவியோடு நீங்கள் சரிசமமாய்ப் நெருங்கி பழகினால்ஒழிய, நீங்கள் அந்த குறிப்பிட்ட ஆடவரிடம் பழகக்கூடாது.

**குறிப்பு:** தவறான சரீர உறவுகள் பற்றியும் காதல் வலையில் விழுந்த ஆவிக்குரிய ஆலோசனைகளைப்பற்றியும்,வாலிப காலத்தில் எப்படியெல்லாம் சோதனைகள் வரும் என்றும், அதிலிருந்து எப்படி நம்மை காப்பாற்றி கொள்வது என்பதைப்பற்றியும் சுமார் 20 வருடங்களுக்கு முன்பே **திரும்பிப் பார்க்கிறேன்** என்ற தலைப்பில் ஜாமக்காரனில் வரிசையாக எழுதியிருக்கிறேன்.

இப்போது அது சிறு சிறு புஸ்தகவடிவில் தயாரித்துள்ளேன். தேவையானவர்கள் எனக்கு எழுதினால் அதை அனுப்பி தருவேன்.

**திரும்பிப் பார்க்கிறேன் நெ.5 நெ.9 என் வாழ்க்கையில் நான் எப்படி திருமணம் செய்தேன், திருமணத்துக்குமுன் எனக்கும் வந்த சோதனைகள், காதல் வலையில் நானும் விழ இருந்து தப்பித்தது எப்படி? ஆகிய விவரங்களை திரும்பிப்பார்கிறேன் NO. 11 எழுதியிருக்கிறேன்.**

இதுவரை **திரும்பிப்பார்க்கிறேன்** என்ற வரிசை எண் 14 வரை என் சொந்த வாழ்க்கையில், ஊழியத்தில் ஏற்பட்ட பலவித அனுபவங்களை தனித்தனியாக எழுதியுள்ளேன். இவைகளில் சில தீர்ந்து போய்விட்டது. மறுபடியும் அவைகளை அச்சிட்டு வெளியிடுவேன். கர்த்தருடைய நாமம் மட்டும் இதில் மகிமைபடுவதாக. ஆமென்.

❖❖❖❖❖❖❖❖❖❖

# வாசகர் கடிதம்:

**கடிதம் :1.** கடவுளின் இரண்டாம் ஆயுதம் சூப்பர்ப்.

2015 ஜீலை ஜாமக்காரனில் நீங்கள் எழுதிய உங்கள் சொந்த அனுபவம் எங்களை மிகவும் பாதித்தது. நாங்களும் உணர்வு பெற்றோம். அந்த பகுதியை முதலில் என் மனைவிதான் வாசித்தார். அதை உடனே என்னிடம் கொடுத்து வாசிக்க கட்டாயப்படுத்தினார். வாசித்தேன். உண்மையில் கர்த்தர் என்னோடும் பேசினார். நாங்கள் கூடி ஜெபித்தோம். இன்னும் என் உள்ளத்தில் உங்கள் அனுபவம் பயத்தை கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. உங்களுக்காக, உங்கள் ஊழியங்களுக்காக நாங்கள் கர்த்தரிடம் நன்றி கூறி ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

- ................ திருநெல்வேலி.

**கடிதம் 2:** உங்கள் அனுபவ சாட்சியை துண்டுப்பிரதியாக அச்சிட்டு ஊழியர்களிடம் விநியோகிக்க ஆசை. - Rev. ...... சென்னை.

**கடிதம் 3:** ஜீலை மாத ஜாமக்காரன் மிகவும் பிரயோஜனமாக இருந்தது. நீங்கள் சென்ற நேபாள ஊழியத்தில் உங்கள் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது அந்த தோல்விக்கு நடுவில் ஒரு இஸ்லாமிய சகோதரானின் சாட்சி மிகவும் அற்புதம். பல ஆண்டு கிறிஸ்தவ பரம்பரையில் பிறந்து வளர்ந்த எங்களுக்கு அது ஒரு புதிய செய்தியாகவும், சவாலாகவும் இருந்தது. நன்றி. - பாளையங்கோட்டை

## தவறான வசன வியாக்கியானம்:

1.9.2015ல் இமயம் டிவியில் இயேசு தேற்றுகிறார். இரட்டையர் சகோ.அதிசயராஜ், அற்புதராஜ் அவர்கள் தன் பிரசங்கத்தில் பாவத்திலிருந்து கர்த்தர் நம்மை தூக்கிவிடுகிறார் என்பதற்கு பழைய ஏற்பாட்டில் 3 சம்பவங்களை கூறினார்.

1).எரேமியா தீர்க்கதரிசியை குழியில் போட்டது. 2). யோசேப்பை குழியில் போட்டது, 3).தானியேலை சிங்கம் உள்ள குழியில் தூக்கிபோட்டது. அதன்பின் இவர்களை குழியிலிருந்து தூக்கிவிடுவிக்கப்பட்டது.

இந்த சம்பவங்களுக்கு ஆவியானவர் எனக்கு தீர்க்கதரிசனமாக கொடுத்த விளக்கம் என்னவென்றால் வறட்சியான தண்ணீரற்ற குழி என்றால் உன் வாழ்க்கையின் வறட்சியை வறுமையை,கடன் சுமையைக் அந்த குழி அடையாளமாக இருக்கிறது. தேவன் அதில் இருந்து உன்னை தூக்கி எடுப்பார். உன் நிலைமை மாறும் சிங்க குகையை என்றால் அது பிசாசை குறிக்கிறது. சிங்கத்தின் வாயை காட்டியதுபோல் பிசாசை பில்லி சூன்யத்தை கர்த்தர் உனக்காக கட்டுவார்.

இப்படி இவர் கூறிய பிறகு தயாபலா?உராபாலா என்று அந்நியபாஷையில் உளறிவிட்டு பிரசங்கத்தை முடித்துவிட்டார். வேத வசனத்தை இப்படி இவர்கள் குதறி எடுக்கிறார்களே, இவர்கள் தன் சபை மக்களை எப்படி வசனத்தில் நடத்த முடியும்?.

இவர்களுக்கெல்லாம் எப்படி டிவி சேனல் கிடைக்கிறதோ! தெரியவில்லை. இப்படிப்பட்ட ஊழியத்தை தாங்கவும் ஆட்கள் இருக்கிறார்கள். - வாணியம்பாடி.

# Blessing CMC:

நீங்கள் எழுதியபடியே Blessing CMCக்கு வந்த கூட்டம் யாரும் இரட்சிக்கப்பட்ட மக்களாக தெரியவில்லை. சந்தையில் சாமான்கள் வாங்குவதுபோல் இருந்தது. இதற்கு பதில் CMCயில் உள்ள ஊழியர்கள் டாக்டர்களை,செவிலியார்களை ஒன்றுசேர்த்து இவர்களை **இரண்டு பிரிவுகளாக அல்லது இரண்டு ஷிப்டுகளாக** பிரித்து ஜெபிக்கும் விசுவாசிகளைமட்டும் ஒன்று கூட்டி, CMCயிலேயே ஜெபித்திருந்தால் ஊழியர்களுக்குள்ளும் ஒற்றுமை வரும், நமக்கு சோறுபோடும் CMC ஆஸ்பத்திரிக்காக நன்றி உள்ளவர்களாக இருக்க CMC ஊழியர்களின் மனதில் எண்ணம் உருவாகும். இப்படிப்பட்டவர்கள் கூடி ஜெபித்தால் மட்டுமே அந்த ஜெபம் கேட்கப்படும். Blessing CMCக்கு வந்தவர்கள் சூப்பர் ஸ்டாரை பார்க்கவந்த சினிமா ரசிகர்கள் கூட்டமாகத்தான் காணப்பட்டது. நீங்கள் எழுதியதின் உண்மை நிச்சயமாக CMC ஊழியர் களுக்கும்,வெல்லூார் கிறிஸ்தவ மக்களுக்கும் குறிப்பாக இதில் தலையிட்ட சகோ.ஸ்டான்லி அவர்களுக்கும் நன்றாக விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன்.Dr....... CMC Hospital, Vellore.

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# பொய்

## (ஊழியர்களுக்கான எச்சரிக்கை செய்தி)

**நன்றி : ஜெபதுாபம்:**

**மிகைப்படுத்தி சொல்வது:**

**(இதை நான் வாசித்து என்னை ஆராய்ந்த பின்தான் மற்றவர்கள் வாசிக்க இதை வெளியிடுகிறேன்).**

**"உள்ளதை உள்ளதென்று....." சொல்லுங்கள் என்றும் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாகும்**(மத் 5:37) என்று வேதம் சொல்லுகிறது.

உள்ளதை சொல்லாமல் அதைவிட மிஞ்சி சொல்வது தீமையாகும். உள்ளதை திரித்தோ,அதிகப்படுத்தியோ கூறுவது பொய்யாகும். உண்மை சிறிது இடம்மாறினாலும் அது பொய்யாகிவிடும். உண்மையைக்கூட மிகைப்படுத்தி அலங்காரம் செய்வதும் ஒருவகையில் பாவமாகும் அதுவும் பொய் கூறுவதற்கு சமம். உள்ள நிலைமையை அப்படியே கூறுவதுதான் **உண்மை.** ஆகையால் எதையும் கூட்டியோ,குறைத்தோ சொல்லக்கூடாது.

**மிகைப்படுத்தி சொல்வது பொய்:**

**நீங்கள் மிகைப்படுத்தி சொல்லுகிறீர்கள்:**

"பிரியமானவரே நீங்கள் எந்த விஷயத்தையாவது உள்ளதை உள்ளதுபோல் சொல்லுகிறீர்களா? உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். எதையும் மிகைப்படுத்தி சொல்லும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறது அல்லவா?

**உங்கள் ஊழியத்தைப்பற்றி:** உங்கள் ஊழிய அறிக்கை எப்படி இருக்கிறது? நீங்கள் நடத்திய கூட்டத்தில் 100பேர் கலந்து கொண்டால் 300 பேர் கலந்து கொண்டவர்கள் என்று சொல்லுகிறீர்கள் அல்லவா? 1000பேர் கலந்து கொண்டால் 5000பேர் கலந்துக்கொண்டார்கள் என்று சொல்லுகிறீர்களா? நீங்கள் சொல்லும் எண்ணிக்கை உண்மைக்கு அதிகமானது அல்லவா? 100 என்பது உண்மை 300 என்பது பொய். 1000 என்பது உண்மை 500 என்பது பொய். நீங்கள் சொல்வது உண்மையா? பொய்யா?

இன்று ஊழிய அறிக்கை பத்திரிக்கைகள் மலிந்துவிட்டன. பொதுமக்களின் ஆதரவு பெறவேண்டும் என்பதற்காக இஷ்டத்தில் ஊழிய அறிக்கைகள் வெளிவருகின்றன. உங்கள் ஊழியத்தைப்பற்றி பிறர் நல்ல அபிப்ராயம் கொள்ளவேண்டும் என்பதற்காக சின்னசின்ன விஷயங்களைப் பெரிதுப்படுத்தி சொல்லுகிறீர்கள் அல்லவா? மிகைப்படுத்தி எழுதுகிறீர்கள் அல்லவா?. அது பொய் என்று நீங்கள் உணரவில்லையா?.

நீங்கள் சிறிய ஊழியத்தை சிறப்பாக செய்தும் மிகைப்படுத்தி கூறுவதால் பொய் சொல்லி விடுகிறீர்கள். செய்த ஊழியம் பயனில்லாமல் போய்விடுகிறது. உண்மையில்லாத ஊழியனாக போய்விடுகிறீர்கள்.

ஊழியத்தின் அளவு பெரிதாக இருப்பதினால் பயன் ஒன்றும் இல்லை. இன்று **விளம்பரம்** பெரும் புகழை கொண்டுவருவதால் இன்றைய ஊழியர்களும் ஊழிய ஸ்தானங்களும் மிகைப்படுத்தப்பட்ட அறிக்கையை **வெளியிட துாண்டப்படுகின்றனர்.** இவ்வித மாயையான

கண்ணியில் பிரபல ஊழியர்களும் எளிதில் சிக்கிக்கொண்டு பொய் சொல்லி வருவதை இன்று காணமுடிகிறது. ஐயோ? என்ன பரிதாபம் மனந்திரும்புங்கள்.

**பெரும் பொய்:**

கைக்நீட்டினால் **பரிசுத்தாவியின் வல்லமை** என் வழியாக இறங்குகிறது.. மக்கள் கீழே விழுகிறார்கள்-விரல் நீட்டினால் விழுகிறார்கள். இதற்கு **பரிசுத்த ஆவியானவர்** பெயரை அல்லவா உபயோகிக்கிறீர்கள். இது எத்தனை **ஆபத்தான பொய்** என்பது உங்களுக்கு தெரியாதா?.

ஜெபத்தில் கர்த்தர் பெயர்களை உங்களுக்கு காட்டுகிறார். அவர்கள் வியாதி சுகமாகிறது என்று கூறுவது பொய் என்பது உங்களுக்கு புரிந்தும் துணிகரமாக பொய்களை அள்ளி விசுகிறீர்களே. அதனால் ஏற்படும் தேவனின் கோபம் உங்கள் மேலும் உங்கள் குடும்பத்தின் மேலும் பற்றி எரியுமே? உங்கள் மரணத்துக்குபின் இந்த தொடர் பொய்களுக்கெல்லாம் நியாய தீர்ப்பில் என்ன பதில் கூறுவீர்கள். உங்கள் பதில் தேவன் ஏற்றுக்கொள்வாரா? அக்கினி இறங்குகிறது. வல்லமை இறங்குகிறது. தீ நாவுகளை பார்க்கிறேன் என்று கூறும் ஊழியர்களே! நீங்களே உண்மையான அக்கினிக்குள் இறக்கப்படபோகிறீர்களே! அதைக்குறித்து உங்களுக்கு என்றாவது பயம் ஏற்பட்டதுண்டா? உங்களை ஆதரித்தவர்களையும் உங்களோடு பாதாள அக்கினிக்குள் இறங்கபோகிறார்களே? அவர்களை தயவுசெய்து விட்டுவிடுங்கள். அவர்கள் குடும்பங்களும் பாதிக்கப்படுமே!. பொய் எத்தனை பயங்கரமானது!

**வேதம் உண்மையான அறிக்கையைத்தருகிறது:**

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்டகாலத்தில் 3000 பேர் 5000பேர் என திராள் மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் 16ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலும் அவனோடிருந்தவர்களும் பிலிப்பி பட்டணத்தில் சில நாட்கள் ஊழியம் செய்தும் கடைசியில் ஒரே ஒரு பெண்தான்(லீதியாள்) இரட்சிக்கப்பட்டாள் என்ற உண்மையான செய்தியை அப்படியே மிகைப்படுத்தாமல் எழுதப்பட்டிருக்கிறது. 19ம் அதிகாரத்தில் பவுல் ஏபேசு பட்டணத்திற்கு வந்து சீஷர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்கள் தலைமேல் கைவைத்து ஜெபித்தபோது அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர் என்றும் அவர்கள் தொகை ஏறக்குறைய **பன்னிரெண்டு** என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**ஆயிரக்கணக்கான** எண்ணிக்கையுள்ள ஊழிய அறிக்கையைக்கொடுக்கும் அதே வேதம் ஒருவர் அல்லது **பன்னிரெண்டு பேர்** என்ற மிகக்குறைந்த எண்ணிக்கையுடன் கூடிய அறிக்கையையும் மிகைப்படுத்தி கூறாமல் உள்ளதை உள்ளபடியே சொல்கிறது. உங்கள் அறிக்கை ஆவியானவரின் அறிக்கைப்போல் உண்மையான அறிக்கை தானா? அல்லது பொய்யான அறிக்கையா?. மேலே வாசித்த வேத சரித்திர ஊழிய செய்திகளின் கணக்குகளோடு உங்கள் ஊழிய காணிக்கை ஒப்பிட்டு பாருங்களேன்.

கொஞ்சத்திலே **உண்மையாக** இருந்தால் அநேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பேன் (மத் 25:21) என்று இயேசு கூறியிருக்கிறார்.

கொஞ்சமான அளவில் உங்களைக் கர்த்தர் பயன்படுத்தும்போது அதில் உண்மையாக இருந்தால்தான் பெரிய அளவில் கர்த்தர் உங்களைப்ப பயன்படுத்தமுடியும். சிறிய அளவில் நீங்கள் பயன்படும்போது பொய்யாக **பெரியளவில் அறிக்கை வெளியிட்டால்** உள்ளதை இழந்து போய்விடுவீர்கள். ஜாக்கிறதை!.

**மனிதன் புகழலாம்:** மிகைப்படுத்தப்பட்ட உங்கள் அறிக்கையை கண்டு, மனிதன் ஒருவேளை உங்களை புகழலாம். ஆனால் கர்த்தர் உங்களை இகழுவார். **பொய் நாவைக் கர்த்தர்** அருவருக்கிறார்.நீதி 6:17. என்று வேதம் சொல்லுகிறது. சாட்சி சொல்லும்போது உள்ளதை உள்ளபடி சொல்லுகிறீர்களா? அநேகர் சாட்சி சொல்லும்போது இல்லாததையும் சேர்த்து சொல்லுகிறார்கள். பழைய ஜீவியத்தைப்பற்றி இரட்சிக்கப்பட்ட ஒருவர் சாட்சி சொல்லும்போது **பழைய பாவங்களையே** மிகைப்படுத்தி கூறுவது பரவலாக காணப்படுகிறது. ஜனங்களை மகிழ்விக்கவும், ஜனங்களின் **அனுதாபத்தை பெறவும்** மிகைப்படுத்தி சாட்சி சொல்லாதீர்கள்.

நீங்கள் சொல்லும் காரியங்களைக் கேட்டு ஜனங்கள் ஆவென்று வாயை திறந்துக் கொண்டு ஆச்சரியப்படலாம். ஒருவேளை கர்த்தருடைய நாமமும் மகிமைப்படலாம். ஆனாலும் பொய் சொல்லி ஜனங்களை வசீகரிக்கவேண்டிய அவசியமில்லையே!. **பொய் சொல்லி** தேவனுடைய நாமத்திற்கு மகிமை வரப்பண்ண வேண்டிய அவசியமில்லையே!.

**நன்மை** காரியத்தை செய்ய தீமையான வழியில் காரியத்தை செய்யக்கூடாது. (You should not do wrong thing to do right thing) தீமையான காரியத்தை செய்து நன்மையான காரியத்தை செய்யவேண்டிய அவசியமுமில்லை.

**பிரசங்கிகளுக்கு இது ஒரு சோதனை:**

பிரசங்கிமார்கள் எளிதில் மேடையில் **பொய்** சொல்லவிட வாய்ப்பு இருக்கிறது. எங்கோயேும் கேள்விப்பட்டதை தான் கண்ட நேரில் நிகழ்ச்சியாக விவரித்து சொல்லுகிறார்கள். அநேகர் **பிறருடைய வாழ்க்கையில்** நடைபெற்ற சில ருசிகரமான சம்பவத்தை தன் சொந்த வாழ்க்கையில் நடைபெற்றதாக சாட்சி கூறுவது பெரும் பொய்யாகும். உள்ளதை உள்ளதென்று கூறுங்களேன். அதில் என்ன உங்களுக்கு கஷ்டம்!. உங்கள் பிரசங்கத்தில் ஒரு **சிறிய பொய்** இருப்பதாக ஜனங்கள் கண்டுபிடித்துவிட்டால் உங்கள் பிரசங்கத்திற்கும் உங்களுக்கும் மதிப்பு இல்லாமல் போய்விடும். கர்த்தருடைய பார்வையிலும் பொய்யராக காணப்படுவீர்கள். நீங்கள் பேசும் மொழியினால் உங்கள் மனைவி,பிள்ளைகள்கூட உங்களை மதிக்கமாட்டார்கள்.

**உங்கள் சொந்த வாழ்க்கையிலும் குடும்பத்திலும் இல்லாத அனுபவத்தை உண்டு என்று சொல்லாதீர்கள்..** உதாரணமாக உங்கள் வீட்டில் **குடும்ப ஜெபம்** ஒழுங்காக செய்யும் பழக்கம் இல்லாதபோது குடும்ப ஜெபத்தைக்குறித்து பிரசங்கத்தில் ஒரு குறிப்பு வரும்போது எங்கள் வீட்டில் அதிகாலை 5 மணிக்கு ஒழுங்காக ஜெபம் செய்கிறோம் என்று தயவுசெய்து பொய் சொல்லாதீர்கள்.

புருஷன்-மனைவிக்குள் வீட்டில் அடிக்கடி சண்டை வருவது உண்மையானால் நாங்கள் **வீட்டில் சண்டையே போடுவதில்லை** என்று பொய் சொல்லாதீர்கள். உங்களை ஆராய்ந்து பாருங்கள். ஊழியக்காரனை தேடி யாராவது வந்தால், அவர் ஜெபத்தில் இருக்கிறார் என்று துணிந்து பொய் சொல்லும் மனைவிமார்கள் பொய் சொல்லும் ஊழியருக்கு துணைபோகிறார்கள். உண்மையில் ஊழியர் உறங்கிக்கொண்டிருப்பார் அல்லது குளித்துக்கொண்டிருப்பார். அந்த உண்மையை அப்படியே கூறிவிடுவதினால் புருஷனுக்கு அவமானம் வந்துவிடுமா? இரவெல்லாம் ஜெபிக்கிறேன் என்று துணிந்து பொய் சொல்கிறவர்களுமுண்டு. சிலரிடம் நான் தினசரி உங்களுக்காக ஜெபிக்கிறேன் என்று பலர் துணிந்து பொய் சொல்கிறார்கள். உங்கள் பெரிய ஊழியத்தில் தினசரி அவர்களுக்காக ஜெபம் செய்யமுடியாது என்று அவர்களுக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். அப்படியிருக்க உங்களுக்காக தினசரி ஜெபம் செய்கிறேன் என்று ஏன் பொய் சொல்கிறீர்கள். பல ஊழியர்கள் உங்களுக்காக அழுது ஜெபிக்கிறேன் என்று துணிந்து

பொய் சொல்வதை டிவியில் காண்கிறோமே. இவர்களெல்லாம் பொய்பேச கூச்சப்படுவதில்லை. இவர்களுக்கு இரண்டாம் நரகம் காத்திருக்கிறது என்று வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. எச்சரிக்கை!

ஜனங்களை சிரிக்க வைக்கவோ, அழ வைக்கவோ, உற்சாகப்படுத்தவோ நம்ப வைக்கவோ எதற்கானாலும் சரி மிகைப்படுத்தி சொல்லாதீர்கள்.

உண்மைக்கும் புறம்பான காரியத்தை நீங்கள் சொல்லி வந்தால் உங்கள் பிரசங்கத்தையோ சாட்சியையோ பலமுறை கேட்ட சிலர் உங்கள் கூட்டத்தில் இருப்பார்கள். நீங்கள் எப்போதும் உண்மை சொன்னால், உங்கள் சொல் மாறாததாக இருக்கும். உங்கள்மேல் அவர்களுக்கு நம்பிக்கை பெருகும். நீங்கள் சில காரியத்தை பொய்யாக சொல்லிவந்தால் இடத்திற்கு இடம் உங்கள் சொல்லில் உங்கள் சாட்சியில் மாறுதல் இருக்கும். ஆனால் மக்களின் நம்பிக்கை இழப்பீர்கள். உண்மை ஒருபோதும் மாறாத தன்மையுடையது.

**பொய்** இடத்திற்கு இடம் மாறிவிடும். உங்களை அறியாமலே மாற்றி சொல்லுவீர்கள். உங்கள் பிரசங்கத்திலோ உங்கள் சாட்சியிலோ காணப்படும் மாறுபட்ட தன்மையை அறியும் ஒரு சிலர் உங்களைப்பற்றி உடனே மற்றவர்களிடத்தில் கூறும்போது நீங்கள் ஒரு இடத்தில் ஒருவிதமாகவும் மற்ற இடத்தில் வேறு விதமாகவும் சொல்வதாக உடனே சொல்லுவார்கள். அதன் மூலம் நீங்கள் சொல்வது **பொய்யென்று** பலர் தெரிந்துகொள்வார்கள். உடனே நீங்கள் கூறிய **95 சதவீத உண்மைகளும்** பொய்யாக கருதப்படுவிடும்.

சகோதரரே, மனந்திரும்புங்கள். மிகைப்படுத்தி அல்லது திரித்து கூறும் பழக்கத்தை விட்டுவிடுங்கள். பொய் பாவமாகும். உங்களிடத்தில் இப்படிப்பட்ட இந்த பாவம் காணப்படுகிறது என்று ஆவியானவர் கூறுகிறார். உங்கள் குறையை அறிக்கை செய்யுங்கள்.

## பொய் கணக்கு:

இன்று ஆவிக்குரிய மக்களும் பொய் கணக்கு எழுத ஆரம்பித்துவிட்டார்கள். வியாபாரி விசுவாசிகளே உங்கள் கணக்கு உண்மையுள்ளதுதானா? உங்கள் பொருட்களை பற்றி பொய்யாக சொல்லி விற்கிறீர்களா? பொருட்களின் தன்மையை உள்ளபடியே சொல்லுகிறீர்களா? உண்மையாக இருக்கமுடியாத இடத்தில் நீங்கள் இருக்காதீர்கள்.

உண்மையான கணக்கை காட்ட முடியாத தொழில் உங்களுக்கு வேண்டாம். அந்த வியாபாரம் உங்களுக்கு வேண்டாம்..

**பொய் சர்டிபிகேட்:** அரசாங்க சலுகை பெற பொய் சர்டிபிகேட் தருகிறீர்களா? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்னும் **இந்து** என்று சான்றிதழ் வாங்கிதந்து உதவித்தொகை பெறுகிறீர்களா? உண்மையான வருமானத்தை மறைத்து பொய் வருமானத்தைக் காட்டி அரசாங்கத்திலே, ஸ்தாபனத்திலோ உதவி பெறுகிறீர்களா?.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நீங்கள் எப்படி இன்று இந்து அல்லது **தாழ்த்தப்பட்ட வகுப்பினர்** என்று சர்டிபிகேட் வாங்கமுடிகிறது.

**இந்து** என்று சர்டிபிகேட் வாங்கி கொடுத்துவிட்டு பின்பு வீட்டுக்குவந்து **பைபிளை** எடுத்துக்கொண்டு கிறிஸ்தவ ஜெபவீட்டுக்கு போய் கிறிஸ்துவின் **நாமத்தில்** எப்படி ஜெபிக்க முடிகிறது?

உங்களால் எப்படி கிறிஸ்துவை அறிவிக்கமுடிகிறது. இந்த கல்வி ஆண்டில் எத்தனை பெற்றோர் **பொய் சர்டிபிகேட்** கொடுத்து பிள்ளைகளை உயர்படிப்பிற்கும், பயிற்சிக்கும் வேலைக்கும் அனுப்பியிருக்கிறீர்கள்? உங்களை சோதித்துப் பாருங்கள். மனந்திரும்புங்கள்.

பொய் சொல்வதினால் வரும் ஆதாயம் ஒன்றுக்கும் உதாவது. **பொய்** சர்டிபிகேட் கொடுத்தாக அரசாங்கத்திற்கு தெரிந்தால் சட்டப்படி அரசாங்கமே உங்களுக்கு தண்டனை கொடுக்கிறது என்றால் ஆண்டவர் கண்டும் காணதவர்போல் இருப்பார் என்றா எண்ணுகிறீர்கள்? அரசாங்கத்தின் **கண்களை** மறைத்துவிடலாம். சட்டத்திற்கு தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் கர்த்தரின் கண்களை மறைக்க முடியாது. நீங்கள் நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை உணருவீர்களாக?

**ஊழியத்தில் பொய் கணக்கு:** சமீபத்தில் ஆவிக்குரிய உலகத்தில் கோடிக்கணக்கான ரூபாயக்கு பொய் கணக்கு எழுதி ஏமாற்றியதாக பத்திரிக்கையின் செய்தி வரும் அளவுக்கு ஊழிய விஷயத்தில் பொய் கணக்கு எழுதி சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தங்களிடம் உள்ள கருப்பு பணத்தை வெள்ளை பணமாக்க தாங்கள் நடத்தும் கூட்டங்களில் காணிக்கை சேகரித்து வெள்ளயாக மாற்றுகிறார்கள். அரசியல் கட்சிகாரர்கள்தான் இப்படி செய்கிறார்கள் என்றால் ஸ்டார் ஊழியர்களும் இந்த வழியை பின்பற்றி அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள்.

சத்திய வேத புத்தகங்கள் அச்சடித்து விநியோகிக்கும் ஸ்தாபன தலைவர்கள் சத்தியத்தை கொலை செய்து குழி தோண்டி புதைத்துவிட்டு பொய் கணக்கு எழுதி கோடிக்கணக்கான ரூபாய்யைக் கையாடல் செய்திருக்கிறார்கள். இந்திய கிறிஸ்தவர்கள் தலை குனிய வேண்டியதுதான். இது வெட்கப்படவேண்டிய விஷயமாகும். இது வேதனைப்படவேண்டிய விஷயமாகும்.

கிறிஸ்தவ சமுதாயமே? கோடிக்கணக்கான பணம் கையாடல் செய்தவர்கள் ஆரம்பத்தில் சின்னசின்ன பொய் கணக்கு எழுதிதான் நாளடைவில் பெரிய பொய் கணக்கு எழுத ஆரம்பித்திருப்பார்கள்.

' ஒரு **பிரபல மிஷனரி ஸ்தாபனத்தில்** அச்சகத்துக்கு கொடுத்த பணத்தை பல லட்சங்கள் ஊழல் நடைபெற்றதையும், அச்சக தொடர்பு வேலையை செய்பவருக்கும், பொது செயலருக்கும் மற்றவர்களுக்கும் பங்கு சேர்ந்ததாகவும், இதில் தொடர்புடைய அனைவருக்கும் வருமானத்துக்கு மீறிய சொத்துகள் எங்கெங்கு வாங்கப்பட்டுள்ளது என்று விவரம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. உடனடியாக நடவடிக்கை மிஷனரி ஸ்தாபன தலைவர்கள் எடுக்காவிட்டால் நிச்சயம் ஜாமக்காரனில் முழுவிவரமும் வெளியிடப்படும். இவைகளை கேள்விப்படும்போது மனம் வேதனையாக இருக்கிறது. யாரையும் நம்ப மறுக்கிறது.

பொய் கணக்கு எழுதுவதை இன்றேவிட்டு மனந்திரும்புங்கள். பணஉதவி அனுப்பும் அமெரிக்கர்களை ஏமாற்றலாம் ஆனால் ஆண்டவரை ஏமாற்ற முடியாது. ஜெர்மனியார்களை ஏமாற்றலாம் ஆனால் ஜீவனுள்ள தேவனை ஏமாற்ற முடியாது. பொய் சொல்லி எவ்வளவு சம்பாதித்தாலும் அதனால் உங்களுக்கு ஆசீர்வாதம் இல்லை என்பதை உணருங்கள்.

**"பொய் நாவினால் பொருளை சம்பாதிப்பது சாவை தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்" நீதி 21:6.**

**அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது. நீதி 10:2.**

**பொய்களை பேசுகிறவன் நாசமடைவான். நீதி 19:9.**

**பொய் நாவினால்** திரளாக சம்பாதித்து ஆக்கினையை குவித்துக்கொள்வதைவிட மெய் சொல்லி எளிய வாழ்க்கை வாழ்ந்து ஆண்டவரின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வது நல்லது.

**பொய்** நாவினால் சம்பாதிப்பதை இன்றே விட்டுவிடுங்கள். பொய் வழியாக ஒரு பைசாகூட உங்கள் பாக்கெட்டுக்குள் வராதபடி காத்துக்கொள்ளுங்கள்.

**பொய்** சொல்லி புகழ்பெறுவது முடிவில் இகழ்ச்சியை உண்டுபண்ணும். ஆகையால் மிகைப்படுத்தி புகழ் பெறவேண்டாம்.

**பொய்** சொல்லி அனுதாபம் பெறுவது முடிவில் வெறுப்பை உண்டுபண்ணும். ஆகையால் பொய் சொல்லி **அனுதாபம்** பெறவேண்டாம்.

**பொய்** சொல்லி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதுகூட முடிவில் இழப்பை உண்டு பண்ணும். ஆகையால் **பொய்** சொல்லி ஊழியம் செய்யவேண்டாம்.

**பொய்** சொல்லி தேவ நாமத்திற்கு மகிமைக்கொண்டுவருவது முடிவில் தேவ நாமத்திற்கு தூஷிப்பை உண்டுபண்ணும். ஆகையால் பொய் சொல்லி தேவ நாமத்தை மகிமைப்படுத்த முயற்சிக்கவேண்டாம். **பொய்** சொல்லி அரசாங்க சலுகைகள் பெறுவது முடிவில் தேவனின் சலுகைகளை நிறுத்திவிடும். ஆகையால் பொய் சொல்லி சலுகை பெறவேண்டாம்.

**பொய்** சொல்லி சம்பாதிப்பது முடிவில் அழிவை உண்டுபண்ணும். ஆகையால் பொய் சொல்லி சம்பாதிக்கவேண்டாம்.

**ஆவியானவர் சொல்வதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.** அன்பானவரே கிறிஸ்தவ ஸ்தாபன தலைவர்களே! உங்களை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அநேக விஷயங்களில் பொய் சொல்லுகிறீர்கள். கவனமாக உங்கள் காரியத்தை சோதித்துப் பார்த்து மனந்திரும்புங்கள்.

**பொய் பேசுவது வீண் வார்த்தையாகும். வீண் வார்த்தைக்கு கணக்கு கொடுக்க வேண்டும்** எனவே மனந்திரும்புங்கள்.

**குறிப்பு:** மேலே வாசித்த கட்டுரையில் இடையிடையே ஜாமக்காரனாகிய நானும் சில செய்திகளை எழுதி இணைத்து வெளியிடுகிறேன். ❖❖❖❖❖❖

# வாசகர்கள் கவனிக்கவும்

**1.** **குறைவான** Stamp **ஒட்டி அனுப்பும் பத்திரிக்கைகளை, கடிதங்களை, கவர்களை ஒரு சிலவற்றை மட்டும் திருப்பி அனுப்புகிறோம். காரணம் அனுப்புபவர்கள் அந்த தவறை சரிசெய்து கொண்டு கடிதத்தின் சரியான எடைக்கு ஏற்ப ஸ்டாம்ப் ஒட்டி அனுப்ப அது அவர்களுக்கு உதவும். இப்படி எழுதுவது உங்களை வேதனைப்படுத்தினால் பொருத்துக்கொள்ளவும். கவர் அனுப்புபவர்கள்** Stamp **ஒட்டி அனுப்பும்போது சரியான எடை பார்த்து, அதற்குறிய** Stamp **ஒட்டி அனுப்பவும்.**

**2.** Book Post **என** Rs.4 **தபால்தலை ஒட்டும்போது திருமண அழைப்பிதழ்களில், கையெழுத்துஇட்டோ அல்லது பேனாவில் எதையாவது எழுதினாலோ** Due **அல்லது அபராதம்**(Fine) **இடுவதால் தபால் அனுப்புபவர் எச்சரிக்கையாக அனுப்பவும்.**

**3. எங்களுடைய ஜாமக்காரன் உங்களுக்கு அல்லது அனுப்பப்படும்போது உங்களுக்கு அனுப்பும் எங்கள் கடிதங்கள் ஏதாவது காரணத்தால் தபால்துறையிலிருந்து** due(fine) **வசூலிக்கப்படும்போது அதை** Refused **என்று எழுதி தயவுசெய்து எங்களுக்கே திருப்பி அனுப்பவும். நாங்களும் எங்களை சரி செய்ய அது உதவியாக இருக்கும்.**

**4. பேங்க் வழியாக,** Emo-**மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் தயவுசெய்து இ-மெயில் மூலமாகவோ, தொலைப்பேசி மூலமாகவோ, கடிதம்மூலமாகவோ, பேக்ஸ்மூலமாகவோ நீங்கள் காணிக்கை அனுப்பிய தேதி-தொகை-எந்த பேங்க் என்ற விவரத்தை எங்களுக்கு தெரிவித்தால் நல்லது. பேங்க் பாஸ்புக்கில் எங்கிருந்து அந்த தொகை வந்தது!, யார் அனுப்பியது! போன்ற விவரங்களை பேங்க் பாஸ்புக்மூலம் அறிய முடிகிறதில்லை. ஆகவே நீங்கள் காணிக்கையை பேங்க்மூலமாக என் அக்கவுண்ட்டுக்கு அனுப்பிய உடனே எங்களுக்கு தெரிவித்து விடுங்கள். இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தந்தால் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டும்போது அவர்கள் எங்களை குற்றம் சாட்ட முடியாதபடியிருக்க உங்கள் அறிவிப்பு உதவியாக அமையும்.**

# You say - God says - bible promises:

**You say: It’s impossible**

**God says: All things are possible - Luke 18:27**

**You say: I am too tired**

**God says: I will give you rest - Mat 11:28-30.**

**You say: Nobody really loves me**

**God says: I love You - John 3:16**

**You say: I can’t go on**

**God says: My grace is sufficient -2 Cor 12:9.,Psa 91:15**

**You say: I can’t figure things out**

**God says: I will direct your steps- Pro 3:5-6.**

**You say: I can’t do it**

**God says: You can do all things - Phil 4:13**

**You say: I’m not able**

**God says: I am able - 2 cor 9:8**

**You say: It’s not worth it**

**God says: It willbe worth it - Romans 8:28**

**You say: I can’t forgive myself**

**God says: I Forgive you- 1 John 1:9, Rom 8:1**

**You say: I can’t manage**

**God says: I will supply all your needs- Phil 4:19**

**You say: I’am afraid**

**God says: I have not given you a spirit of fear - 2 Timo 1:7**

**You say: I’m always worried and frustrated**

**God says: Cast all your cares on ME- 1Peter 5:7**

**You say: I’m not smart enough**

**God says: I give you wisdom- 1 Cor 1:30**

**You say: I feel all alone**

**God says: I will never leave you forsake you - Heb 13:5.**

# FMPB அறைகூவல் கூடுகை - வத்தலகுண்டு






வத்தலகுண்டு CSI ஆசிரியர் பயிற்சி பள்ளி மண்டபத்தில் நடந்த இக்கூட்டம் ஆசீர்வதமாக அமைந்தது. FMPB ஊழிய ஜெப ஐக்கியம் இந்த பகுதியில் இதுவரை நடத்தப்படாமல் இருந்தது. இம்முறை நிச்சயமாக புதிய வாசல் ஜெபகூடுகைக்கு திறக்கப்படவும், இப்பகுதியில் மிஷனரி ஜெபகூட்டத்தை நடத்த தன்னர்வ தொண்டர்கள் முன்வரவும் ஜெபிப்போம். கூட்டத்தில் குடும்ப பிரச்சனைகளையும், அதில் நம் சாட்சியை காத்துக்கொள்ளும் காரியங்களையும் மட்டும் பகிர்ந்துக்கொண்டேன். தேவ நாமம் மகிமைப்பட்டது. இங்கு **Rev.கோயில்ராஜ்** அவர்கள் மிஷனரி பணியைப்பற்றி பகிர்ந்துக்கொண்டார்.

# FMPB குடும்ப கூடுகை (ஸ்கேன்) -போடிநாயக்கனுார்







தேனி மாவட்டம் **போடிநாயக்கனுார்** (மதுரை திருமண்டலத்தில்) CSI கிறிஸ்துநாதர் ஆலயத்தில் நடந்த கூட்டங்கள் யாவும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தன. **Rev.கோயில்ராஜ்**(ஸ்கேன்) அவர்கள் **ஹிமாச்சல பிரதேச** ஊழிய தேவைகளைக்றித்தும் FMPBயின் மிஷனரி ஊழியங்களைக்குறித்தும் மிக தெளிவாக பணிதளத்தில் நடந்த உயிருள்ள சாட்சிகளோடு பகிர்ந்துக்கொண்டார். மக்கள் மிக ஆவலாக தங்களை அர்பணித்து மிஷனரி பணிக்கு தங்கள் பங்களிப்பை தாராளமாக கொடுத்தார்கள். கர்த்தருடைய செய்தியை இரண்டு கூட்டங்களிலும் பகிர்ந்துக்கொண்டேன். CSI சபை ஆயரும் சேர்மேன் அவர்களுமான **Rev.ஸ்டீபன் வேதராஜ்,**MA.,MPhil.,BD.,அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை தாங்கி ஜெபித்தார்கள். கர்த்தருக்கு மகிமை உண்டவதாக.

# தேவன் எந்த பாஷையில் மனிதன் ஜெபிப்பதை கேட்பார்:

‘ மனிதன் தேவனோடு பேசுவது ஜெபத்தின் மூலமாக மட்டுமே! அது எந்த பாஷையில் இருக்கவேண்டும்?.

‘ தேவன் நம்மோடு எந்த பாஷையில் பேசவிரும்புகிறாரோ, அதே பாஷையில்தான் நாம் கர்த்தரிடம் பேசவேண்டும். ஒரு தாய் தன் பிள்ளை தன்னிடம் எந்த பாஷையில் பேசவிரும்புவாளோ, அதுபோலவே நம் அன்பு தெய்வமும் விரும்புகிறார்.

**‘ கர்த்தர் (பவுலாகிய) தன்னை சந்தித்த முதல் சந்திப்பில்...... நான் வழைமையாக பேசும்.... எபிரேயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்! என்கிறார். (அப் 26:14).**

‘ அப்படியிருக்க உனக்கும், கர்த்தருக்கும், பிசாசுக்கும் புரியாத **அந்நியபாஷை** என்ற பெயரில் ஜெபத்தில் பேசுவது வீண் அல்லவா! ஆகவே அந்நியபாஷையில் பேச தயவுசெய்து முயலாதீர்கள்.

**SEPTEMBER 2015**

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.